Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை (23.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 084




'இரட்டை முகம்' 05



வாய்ப்புத் தவறினால்? 08

அதிவேகம்




12



திரும்பினார் வீடு! 17



வழிபாடு 18


## நீதிமன்ற உத்தரவுகளை தெரிவுக்குழு ஏற்காது

மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவுகளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.

நீதிமன்றங்களினால் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணை உத்தரவுகளுக்கு பதிலளிக்க வேண்டாம் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஏற்கனவே ஆலோசனை வழங்கியிருந்தார்.


இந்த ஆலோசனையை பின்பற்றப் பேரவதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பதினொரு உறுப்பினர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்களும், சபாநயாகரும் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம்.திகதி நீதிமன்றில்

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க இராஜாங்கச் செயலராக ஜோன் கெர்ரி நியமனம்



அமெரிக்காவின் புதிய இராஜாங்கச் செயலர் பதவிக்கு ஜோன் கெர்ரியின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பரிந்துரைத்துள்ளார்.

பராக் ஒபாமா இரண்டாவது பதவிக்காலத்துக்கும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போதிலும், தற்போதைய இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் தொடர்ந்து அந்தப் பதவியை வகிக்க விரும்பவில்லை.

இதையடுத்தே, அமெரிக்காவின் புதிய இராஜாங்கச் செயலராக ஜோன் கெர்ரி நியமிக்கப்படவுள்ளதாக ஒபாமா அறிவித்துள்ளார். ஜோன் கெர்ரி

19 ஆம் பக்கம் பார்க்க

# இறுதிக்கட்ட அனர்த்தம் குறித்து அரசு, புலிகள் மீது விசாரணை

## வலியுறுத்துகிறது மன்னிப்புச்சபை



(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போர் அனர்த்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் கொலைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு மீது விசாரணை நடத்தப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் சலில் ஹெட்டி தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் கொலைகள் தொடர்பில் இலங்கை சுயாதீனமான சர்வதேச விசாரணையொன்றை சந்தித்தாக வேண்டும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பணிப்புறக்கணிப்பு இன்று காலை நிறைவு

(யாழ்ப்பாணம்)

வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு இரண்டாவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்த நிலையில் இன்று காலை 8.00 மணியுடன் நிறைவு பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் திருமாறன் கடந்த வியாழன் இரவு கந்தர்மடம் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் வாள் வெட்டுக்கு இலக்கான சம்பவத்தைக் கண்டித்து யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று முன்தினம் காலை முதல் இரண்டு நாள் பணிப்புறக்கணிப்பு மேற்கொண்டிருந்தனர். இந்த 48 மணி நேர பணிப்புறக்கணிப்பு இன்று காலை

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரிலும் வெள்ளப்பெருக்கு மக்களை இடம்பெயர அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக அதனை அண்டிய இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது. இதன்படி, ஏற்படும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகத்தின் ஸ்திரத்தன்மைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் அவசியம்

### நீதியரசர் ஷிராணி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனநாயகத்தின் ஸ்திரத்தன்மைக்காக நீதிமன்றம் சுயாதீனமாகவும், அத்தியாவசியமான சாதனமாகவும், இருப்பதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நீதிமன்ற சேவைகள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

பல தசாப்த காலமாக பொதுமக்களின் அமைதி மற்றும் உரிமைகளை பெற்றுக் கொடுக்கும் ஒரு நிறுவனமாக நீதிமன்றம் திகழ்கிறது.

சட்டத்தின் அடிப்படைத் தன்மையிலேயே அது புரிகிறது. சட்டத்தின் முன்னால் அனைவரும் தராதரம் இன்றி சமனானவர்களாகவே கருதப்படுகின்றனர்.

எனவே, எந்த ஒருவருக்கும் தமது உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம் தமது பாது

19 ஆம் பக்கம் பார்க்க

## உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கம் அனைவரும் ஏற்க வேண்டும்

### ஐ.தே.க. தெரிவிப்பு

உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் சட்ட விளக்கம் அளித்திருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் சாசனம் தொடர்பிலான சட்ட விளக்கங்களை அளிக்கும் ஏக போக அதிகாரம் உச்ச நீதிமன்றிற்கு மட்டுமே காணப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்றம் ஆகியன அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டி

19 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு கோருகிறது சட்டத்தரணிகள் சங்கம்

தமது சங்க உறுப்பினர்களுக்கு தொடர்ந்து விடுக்கப்படும் அச்சுறுத்தல், இடையூறுகள் குறித்து அதிகாரிகள் உடன் தலையீடு செய்ய வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களில் தமது உறுப்பினர்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ஆகியோருக்கு கடந்த நாட்களில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்

19 ஆம் பக்கம் பார்க்க

# பின்தங்கிய பாடசாலைகள் யாழில் வளர்ச்சியடையவில்லை


யாழ்.மாவட்டத்தின் கல்வி மேம்பாட்டுக்கு பெருமளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ள போதும் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த பாடசாலைகள் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே இயங்கி வருகின்றமை கவலைக்குரிய விடயம் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருேகேசு சந்திர குமார் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற வடலியடைப்பு சைவப்பிரகாசாவித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு அரசிற்கு மட்டுமே உண்டு என்ற எண்ணம் கல்விச் சமூகத்திடமிருந்து மாற்றமடைய வேண்டும். அப்போது தான் பாடசாலைகள் இயல்பான முன்னேற்றத்தை எட்டும் அதனடிப்படையில் நூற்று பதினைந்து வருடங்கள் பழமையான இப்பாடசாலை இன்றும் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்த நிலையிலேயே தொடர்ந்துமியங்கிக் கொண்டிருக்கின்றமைக்கும் இதன் பின்தங்கிய நிலைக்கும் இப்பாடசாலையின் கல்விச் சமூகத்தினரும் பொறுப்பானவர்களே.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்காக வருடாந்தம் பல கோடி ரூபா செலவு செய்யப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் மட்டும் சுமார் ஆயிரத்தி ஐநூறு இலட்சம் ரூபா வரையிலான நிதி ஒதுகக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான பாடசாலைகள் தொடர்ந்தும் அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே இயங்கிவருகின்றன. அத்தோடு மாவட்டத்திலுள்ள சில கல்விவலயங்களில் ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரிய வளப் பற்றாக்குறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன எனவே இந்நிலைப்பாடுகள் மாவட்டத்தினுள்ளேயே வளப்பங்கீடுகளின் சீரற்றதன்மையை எடுத்துக் காட்டுகின்றன. எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இந்நிலைமைகள் இவ்வாறிருக்க யுத்தப் பாதிப்புக்களை எதிர்கொண்டு கல்வித்தளத்தை முற்றாக இழந்து நிற்கும் வன்னி மாவட்டங்களின் மாணவர்கள், ஆசிரியர் வளங்களுக்காக ஏங்கிக் காத்திருக்கின்ற நிலைமையையும் அதற்கான பதிலைவழங்க வேண்டிய மாவட்டமாக குறிப்பாக யாழ்.மாவட்டம் அமைந்துள்ள தாகவும் குறிப்பிட்டார். எனவே இந்த சமூக பொறுப்பை கல்விசார் அதிகாரிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திர குமார் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் திறமையாக செயற்பட்ட மாணவர்களுக்கும் நாடாளுமன்ற



உறுப்பினர் சந்திரகுமார் பரிசில்கள் வழங்கினார்.

பாடசாலை அதிபர் அம்பலநாதனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோட்டக்கல்வி அதிகாரி சிவானந்தராசா வலி. மேற்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலிதெற்கு பிரதேசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் செல்வகுமார், பொதுச் சுகாதார பரிசோதகர் ஜெகதாசன், மத குரு பிரதாபசர்மா கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் கந்தசாமி ஆகியோரும் மற்றும் அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

## யாழில் நிவாரணப் பொருட்கள் சேகரிப்பு

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு உதவிகளை செய்யும் முகமாக யாழ். மாவட்ட மக்களிடம் இருந்து 'சிவமானிட விடியற்கழகம்' நிவாரணப் பொருட்களை சேகரித்து வருகின்றது.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்களை எதிர்வரும் புதன் கிழமை அங்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சிவமானிட விடியற் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்கள் உடமைகளை இழந்து நிர்க்கதியாக இருப்பதுடன் தொற்று நோய்த் தாக்கத்திற்கும் உள்ளாகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியது எமது அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும். அந்த வகையில் இந்த மக்களுக்கு உதவுவதற்காக சிவமானிட விடியற்கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உதவிகளை வழங்க விரும்புவோர் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பின்புறமாகவுள்ள கல்லூரி வீதியில் அமைந்துள்ள இராஜபரமேஸ்வரி மனிதவள மேம்பாட்டு மையத்திலோ அன்றி கந்தர் மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்திலோ எதிர் வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் வழங்கி உதவுமாறு அக்கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## பாடசாலை உபகரணங்கள் மாணவர்களுக்கு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிப்போன் கல்வி, கலாசார நிலையத்தினால் 41 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சுமார் 5000 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிறுவனத்தினால், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களில் இருந்து மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களின் கல்வி நிலையினை அடிப்படையாகக் கொண்டு



கற்றல் உபகரணங்கள் மற்றும் வங்கி பண வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தால் வங்கி பண வைப்புக்களில் மாதாந்தம் 700 ரூபா பணம் வைப்பிலிடப்படுகின்றது. தரம் 9 முதல் உயர்தரம் வரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

யப்பான் அரசாங்கத்தினால் நிப்போன் கல்வி, கலாசார நிலையம் நிறுவப்பட்டு 27 வருடங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தின் தலைவர் கே.கோனேஷ் தலைமையில் மீகாஹத்தென்ன சந்திரசிறி நாயக்க தேரர் நெறிப்படுத்தலில் நேற்று இவ் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, 512 படைப் பிரிவின் மேஜர் பல்லேகல, 51 ஆவது படைப்பிரிவின் கொமாண்டர் குணவர்த்தன, 511 படைப் பரிவின் பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தின் பிரதம இணைப்பாளர் பிரியந்த உட்பட இராணுவ அதிகாரிகள், மற்றும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கலைஞர் விபரம் திரட்டல்

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற மாற்று வலுவுடையோரிடையில் கலைத்துறையில் ஆற்றலுடையவர்களது கலைச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் அவர்களது விபரங்களை மாவட்டச் செயலக கலாசார பிரிவினர் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களிடம் தங்கள் விபரங்களை சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். (142)





கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவரின் பெற்றோர் மற்றும் பேராசிரியர்களுடன் யாழ்.கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க சந்திப்பொன்றை நேற்று முன்தினம் பலாலி படைத்தலைமையகத்தில் நடத்தியபோது கைது செய்யப்பட்ட மாணவனின் தாய் தனது மகனை விடுவிக்கக்கோரி கண்ணீர் மல்குவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் கைதான மாணவர் ஒருவனின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதையும் காணலாம்.

(படங்கள் ஆர்.இராஜகுமார்)

## சடலத்தினை உரிமை கோருமாறு யாழ்.பொலிஸார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத் நிலையில் சடலமொன்று நேற்று யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

எம். கந்தசாமி (வயது 60) என்பவரின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் இதுவரையில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளதாகவும், இவரின் சடலத்தினை உறவினர்கள் உரிமை கோருமாறும் யாழ்.பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆசிரியர்களின் இடமாற்றம் ஜனவரி 30 இற்குள் அமுல்

வடமாகாணத்திலுள்ள ஆசிரியர்களின் இடமாற்றங்கள் வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்குள் நடைபெறும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு கொழும்பு பத்திரமுல்லவில் உள்ள வடமாகாண ஆளுநரின் செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஆளுநரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக் கல்வி அதிகாரிகள் தமிழர் ஆசிரியர் சங்க, முன்பள்ளி ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் வன்னிக்கு ஒப்பந்த அடிப்படையில் சென்ற ஆசிரியர்களில் 316 பேரும் வன்னிப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கும் 183 பேருமாக 499 ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையிலேயே இந்த மீளாய்வு இடம்பெறவுள்ளன.

ஜனவரி முதல்வாரத்தில் மீளாய்வு செய்யப்பட்டு ஜனவரி 30 இற்குள் நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

வலயக்கல்வி அதிகாரிகள் அதிபர்களின் இடமாற்றங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது. மாணவர்களின் கல்வி நிலையைப் பாதிக்காமல் இந்த இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளன. (12)


# உலகம் அழியாததால் பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி

(குருநகர்)

எதிர்பார்க்கப்பட்டது போல் நேற்றுமுன்தினம் உலக அழிவு ஏற்படாததை கண்ட மக்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.45 மணிக்கு குருநகர், மவுண் கார்மேல் வீதியில் இளைஞர்கள் குழு தொடர்ச்சியான பட்டாசுகளைக் கொளுத்தி ஆரவாரித்து மகிழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்து ஆலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவெம்பாவை நிகழ்வோடு, வெள்ளிக்கிழமையாக அமைந்ததாலும் கூட்டுப் பிரார்த்தனைகள், வழிபாடுகள் செய்து மக்கள் உலக அழிவில் இருந்து பூமியைக் காப்பாற்ற வேண்டுதல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (68)



வாழ்வெழுச்சி திட்டத்தின் கீழ் (திவிநெகும) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் கருவாடு பதனிடும் தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது தெல்லிப்பளை பிரதேச செயலர் ஸ்ரீமோகன், இராணுவத் தளபதி பிரிகேடியர் ரத்தெனிய மற்றும் வலிவடக்கு ஈ.பி.டி.பி அமைப்பாளர் அன்பு ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். சேந்தான்குளம், மயிலிட்டி, பலாலி ஆகிய கிராம மக்களுக்கு கருவாடு பதனிடும் தளபாடங்கள் கையளிக்கப்பட்டது.

# சுகாதாரத் தொழிலாளர்கள் சீருடை அணிவது கட்டாயம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் பரிசாரகர்கள், சுத்திகரிப்பாளர்கள், சுகாதார தொழிலாளர்களின் உரிய சீருடைகளில் கடமைக்கு சமுகமளிப்பது கட்டாயம் என்பது சுகாதார அமைச்சின் சுற்று நிருபமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012.05.03 ஆம் திகதியிடப்பட்ட இந்தச் சுற்றுநிருபத்தின்படி உடனடியாக அமுலுக்கு வரும்படி ஆண்பெண் பரிசாரகர்கள், ஆண்பெண் சிற்றூழியர்கள், ஆண்பெண் சாதாரண தொழிலாளர்கள் அவர்களுக்குரிய சீருடையில் கடமைக்கு சமுகமளிப்பது கட்டாயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சீருடையுடன் காணப்படாதவரின் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்தச் சுற்று நிருபம் மத்திய அரசின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலைக்கும் இவ்வாறு சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (பா)

# சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறந்திருக்கும்

(குருநகர்)

நத்தார் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு இன்று ஞாயிறு விடுமுறையும், எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறையும் நீக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க தவிசாளர் அ.அல்பேட் தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்கூறிய இரு தினங்களும் வழமைபோல் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறந்து வைத்துத் தொழிற்படுமென அறிவிக்கப்படுகிறது.

அதேவேளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நத்தார் தினத்தன்றும், 1 ஆம் திகதி புதுவருட தினத்தன்றும் நிலையங்களை மூடி விடுமுறை நடைமுறைப்படுத்தப்படுமென்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (68)

# அச்சுறுத்தும் மீற்றர் வட்டி

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் மீற்றர் வட்டி என்ற பெயரில் உள்ளூர்களில் வங்கியின் வட்டியைவிட பலமடங்கு கூடிய வட்டிக்கடனை வாங்கி விட்டு மீண்டும் கடனையும், வட்டியையும் செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலமாக வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள அரச மற்றும் அரசசார்பற்ற வங்கிகள் குறைந்த வட்டியிலான சில கடன் திட்டங்களை மீளப் பெறமுடியாமல் மட்டுப்படுத்தியுள்ளன.

இதனால் வறுமை நிலையில் வாழ்பவர்கள், அவசர தேவையுடையோர், தொழில் முயற்சியாளர்கள் எனப்பலர் பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் அதிக பணம் வைத்திருப்பவர்களிடம் வங்கிகளின் வட்டியைவிட அதிக பல மடங்கு வட்டியுடன் மீற்றர் வட்டி என்ற பெயரில் கடனை வாங்கிவிட்டு நாளாந்தம் வட்டியைகூடச் செலுத்த முடியாமல் உண்ணாமல் உறங்காமல் இருந்து இறுதியில் உயிரைப் பணயம் வைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மீற்றர் வட்டிக்கு தமது அவசர நலன் சார்ந்த தேவைக்காக பெற்றுவிட்டு மீளளிக்கமுடியாமல் பலர் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். (116)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் – 2012

உறுப்புரை 20

1. எவருக்கும் சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்துக்கு உரிமையுண்டு.
2. ஒரு கழகத்தினைச் சேர்ந்தவராயிருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.




பருத்தித்துறை சிங்கர் நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கணனி அன்பளிப்புச் செய்யப்பட்டது. இக் கணனியை சிங்கர் நிறுவன விற்பனைப் பணிப்பாளர் குமார் சமரசிங்க பாடசாலை ஆசிரியையிடம் கையளிப்பதையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் இரத்தின இராகவன், சிங்கர் நிறுவன சிரேஷ்ட முகாமையாளர் எம்.மகேசரட்ணம், பருத்தித்துறை முகாமையாளர் பி.ஜெயேந்திரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (01)

# கோப்பாய் பகுதியில் திருட்டுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை கோப்பாய் பகுதியில் வீடு உடைத்து கையடக்கத் தொலை பேசி ஒன்றைத் திருடிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட மூவர் வேறு ஒரு திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பது தெரியவந்திருப்பதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த செப்ரெம்பர் மாதம் கோப்பாய்ப் பகுதியில் வீடு உடைத்து கையடக்கத் தொலைபேசி திருடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டதாகவும், அவர்களிடத்தில் மேற்கொண்டு விசாரணை நடத்தியபோது அதேமாதம் 30 ஆம் திகதி அதே பகுதியில் பிறிதொரு வீட்டினை உடைத்து அங்கிருந்த ரீவி, டிவிடி ஆகிய இலத்திரனியல் சாதனங்களைத் திருடியிருப்பது தெரியவந்திருந்ததனை அடுத்து அவர்களிடமிருந்து அந்தப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன், அவர்களை நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தியதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (பா)

# படைவீரருக்கு டெங்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் படைவீரர் ஒருவருக்கு டெங்குத்நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவர் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக இந்த வருடம் இதுவரை 630 பேர் இந்த நோய்த்தொற்றிற்கு இலக்காகி இவ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

இதேவேளை திருநெல்வேலி இராணுவமுகாம் இராணுவ வீரர்கள் பலருக்கு இவ்வாறு கடந்த மாதம் டெங்குத்தொற்று ஏற்பட்டு இவ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (பா)

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.

- லியோ டால்ஸ்டாய்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அயலானை உனக்குள் தேடு!

மற்றைய சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது வெறுப்பு, வன்மம், வக்கிர உணர்வுகளெல்லாம் நம்மிடம் சற்று அதிகமிருப்பதாகவே சொல்லமுடிகிறது. அதற்கு நாம் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளான சமூகம் என்பதும், இருபது வருடங்களுக்கு மேல் நீடித்த போரினுள் வாழ்ந்துவிட்டவர்கள் என்பதும், பாடழிவை நம் வாழ்வில் சந்திக்க நேர்ந்தவர்கள் என்பதும் காரணங்களாக் இருக்கலாம்.

ஆனால் இத்தகைய அவலங்களைச் சந்தித்த ஏன் இதைவிடவும் மிகக் குரூரமான பேரளவிலான அவலங்களைச் சந்தித்த சமூகங்கள் தங்கள் காயங்களை ஆற்றிக்கொண்டு மீண்டு இயல்புக்குத் திரும்பியிருக்கின்றன. அகாசி திரும்பத் திரும்ப இங்கு வந்து சொல்லிச் சென்றதுபோல ஜப்பான் நல்ல உதாரணம். மிகப்பெரிய கொடுமையைத் தாங்கியவர்கள், அதை இழைத்தவர்களுடனேயே இணக்கத்தை ஏற்படுத்தி, பழி மறந்து தங்கள் வாழ்வைச் செழுமைப்படுத்திக் கொண்டார்கள்.

அதுமட்டுமல்ல ஜேர்மனி, வியட்நாம், கம்போடியா என்று பல நாடுகள் பல வருடங்களாக யுத்தக்கொடூரங்களை அனுபவித்தவை. பேரிடர்களைக் கடந்து, அதன் காயங்களை காலத்தால் ஆற்றி, தங்கள் வாழ்வையும் மனதையும் மலர வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் அதுபோல் மீளமுடியும்.

பொதுவில் நாம் அடுத்தவர்களின் துன்பங்களை துக்கங்களை எதிர்பார்ப்புகளை நம் மனதில் எடுக்காதவர்களாகவே பேசியும் செயற்பட்டும் வருகிறோம். அவர்களுக்குள்ள பிரச்சினைகள் பற்றி நாம் யோசிப்பதுமில்லை. நம்முடைய துக்கங்களை தேவைகளை மட்டுமே ஓங்கிப் பிரலாபிப்பதுடன், மற்றவர்களும் எங்கள் பிரச்சினைகளையே கவனிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

இது யுத்தத்தால் வந்த மனோநிலை அல்ல. அதற்கு முன்பிருந்தும் நமது பொதுவான சமூகக் குணாம்சம் என்பது மிகவும் சுயநல மயப்பட்டதாகவே இருக்கிறது. யாரும் சாகலாம், யாரும் இழிவுபடுத்தப்படலாம், எவர்மீதும் எத்தகைய பழிகள் துன்பங்களையும் சுமத்தலாம் எங்களுக்கு லாபம் வருமாக இருந்தால் சரி என்ற ஒரு மனப்பான்மை நமக்கிருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல. யோசித்தால் எல்லோருக்கும் புரிந்துவிடக் கூடியதே.

நாங்கள் எங்கள் எல்லோரதும் நலமான வாழ்க்கைக்காக வெறுப்பையும் வன்மத்தையும் சுயநலத்தையும் குறைத்துக் கொள்வது பற்றி யோசிக்க வேண்டும். அதர்மத்தைக் காணச் சகிக்காமல்தான் உறங்கிக்கொண்டேயிருக்கிறேன் என்றவன் கும்பகர்ணன். போர்க்களத்தில் அவன் சாகும் தறுவாய் வந்துவிட்டபோது, ராமன் அவனிடம் வரங்கள் தருகிறேன் கேள் என்கிறான்.

'வீழ்ந்தான் கும்பகர்ணன்' என்ற பெயர் வரக்கூடாது எனக்கு. உன் பாணத்தினால் என் தலை கொய்யப்பட்டு அது கடலில் விழட்டும்; இந்தப் போர்க்களத்தில் விழவேண்டாம். அடுத்த வரமாக, என் தம்பி விபீஷணன் இராவணனை விட்டுவிட்டு உன்னிடம் வந்துவிட்டதைப் போல் மறுபடியும் உன்னைவிட்டுப் போய்விட்டால், இப்போது நீ என் மீது பிரயோகிக்கும் பாணத்தை அவன் மீது பிரயோகித்து விடாதே. பாவம் அவன் அதைத் தாங்க மாட்டான். அவன் உயிரோடு இருக்கும்படி அவனை விட்டுவிடு என்று கேட்டுக்கொள்கிறான்.

சாகும்போதும் அடுத்தவனிடம் கொள்ள வேண்டிய அன்பு பற்றியே இலக்கியங்கள் போதிக்கின்றன. அத்தகைய அன்பினால்தான் வாழ்க்கைக்கு நல்லவிதமான அர்த்தத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்; வன்மத்தினாலும் பழியுணர்ச்சிகளாலும் அழிவுகளைத்தான் மேலும் மேலும் தொடர்ந்து உண்டாக்கிக் கொண்டிருக்க முடியும்.

மற்றவர்களின் பிரச்சினைகளையும் நமக்குள் தேடும் இயல்பை நாம் அடைந்துவிட்டால் நமது பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் கண்டடைந்துவிடுவோம்.

- ஆசிரியர்

# இலங்கை தொடர்பான அமெரிக்க போக்கில் புதிய கொள்கை மாற்றங்கள் வருமா?

## ஆங்கில ஊடகம் பரபரப்புத்தகவல்

(கொழும்பு)

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் பதவிக்கு ஜோன் கெரி நியமிக்கப்பட்டால் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படக் கூடுமென ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி பராக் ஒபாமா அரசாங்கத்தின் இரண்டாவது இராஜாங்கச் செயலாளராக ஜோன் கெர்ரி நியமிக்கப்பட உள்ளார்.

ஜோன் கெர்ரியின் வெளியுறவுக் கொள்கைகள், தற்போதைய இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனின் கொள்கைகளை விடவும் மாறுபட்டு காணப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தொடர்பிலான நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹிலாரி கிளின்ரன் இந்தியாவின் ஊடாக இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை விவகாரங்களில் ஜோன் கெர்ரி கூடுதல் கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை நிலைமைகள் குறித்து கெர்ரி சில காலங்களுக்கு முன்னதாக அறிக்கை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மனித உரிமை, ஊடக சுதந்திரம், ஜனநாயகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஜோன் கெர்ரியின் குறித்த அறிக்கை புலம்பெயர் தமிழ் மக்களை கோபமடையச் செய்திருந்தது.

பொஸ்டனைச் சேர்ந்த சில தமிழ் அமைப்புக்கள் கெர்ரியின் அறிக்கைக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நட்பு ரீதியான முறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் கொள்கையை கெர்ரி பின்பற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறெனினும், இடம்பெயர் மக்கள் விவகாரம், மனித உரிமை நிலைமைகள், கருத்து, பேச்சுசுதந்திரம், ஊடக சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களில் தமது எதிர்பார்ப்புக்களை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டுமென ஜோன் கெர்ரி விரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நிரம்பி வழிகிறது இரணைமடுக்குளம் அனர்த்தங்களைத் தவிர்க்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்திருப்பதால் அதன் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக குறித்த பகுதி மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குளத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தகவல் தருகையில், குளத்தின் நீர்மட்டம் தற்போது 30 அடி ஆக உள்ளது. கனகராயன் ஆற்றிலிருந்து நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் நேற்று மாலை 10 வான் கதவுகளும் 6 இஞ்சிக்கு திறக்கப்பட்டுள்ளது. குளத்தின் அணைக்கட்டு பலமாக இல்லாததால் 30 அடிக்கு மேல் நீர்மட்டத்தைப் பேண முடியாது என்றும் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தன் நேற்றுத் தெரிவித்தார்.

இதனால் குளத்தின் கீழ் உள்ள முரசுமோட்டை, ஊரியான், மருதநகர், நாகேந்திரபுரம், பரந்தன், சிவபுரம், உடுப்பாற்று கண்டல், புதுக்குளம், ஐயன் கோயிலடி, தட்டுவன்கொட்டி, கோரக்கன் கட்டு, பன்னங்கண்டி போன்ற இடங்களில் உள்ள மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி கிளிநொச்சி மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு கேட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் 2200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றன. இவர்களுக்கு வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டால் உதவுவதற்கு தாம தயாராக இருப்பதாகவும் அந்தப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை குறித்த பகுதி மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(கிரு, 29)

# அடுத்த ஆண்டில் புதிய மெருகுடன் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

## கல்வி அமைச்சின் செயலாளர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப்பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற கலைஞர்களது கலைப்பணிகளைப் போற்றும் வகையில் வருடந்தோறும் முன்னெடுத்துவருகின்ற செயற் பாடுகளில் தமிழ் இலக்கிய விழாவும் கலைஞர்கள், படைப்பாளிகள் கௌரவிக்கப்படுவதும் பல்வேறு கலை நிகழ்வுகளை அரங்கேற்றுவதும் முக்கிய செயற்பாடுகளாக அமைகின்றன என அண்மையில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்ற வடமாகாணத் தமிழ் இலக்கிய விழாவின் கலை நிகழ்வுகளில் தலைமையுரையாற்றிய கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 2013ஆம் ஆண்டு நிச்சயமாகப் பல மாற்றங்களை உள்வாங்கிய புதிய கட்டமைப்புடன் வடமாகாணத்திற்குரிய பண்பாட்டம்சங்களை அடையாளப்படுத்தக் கூடிய வகையில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் செயற்பட ஆரம்பிக்கும் என நம்புகின்றேன் இதற்காக கலாசார உத்தியோகத்தர்களால் பல ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றினை ஆளுநர் அங்கீகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைதீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் பாடசாலை மாணவர்களதும், கலைஞர்களினதும் தரமான கலைப்படைப்புக்கள் அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (142)

# காரைநகர் வீதிப்புனரமைப்பு சுற்றுவீதிக்கு விரைவில் "காபற்"

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 வருடங்களாக புனரமைக்கப்படாமல் உள்ள நிலையில் குண்டும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காரைநகர் சுற்றுவீதி இருந்து வருகிறது. இதனால் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் மற்றும் தனியார் போக்குவரத்து மினிபேருந்துகள் மற்றும் ஏனைய வாகனங்களின் இயந்திரங்கள் பெரும் இடர்பாடுகளுக்கு உள்ளாகி வந்தன.

இதனால் கடந்த 2010ஆம் ஆண்டு அவ்வீதி புனரமைப்புக்காக நிதி ஒதுக்கப்பட்டும் அவ் வீதி புனரமைப்பு செய்யப்படாது இருந்தது. இதனையடுத்து யாழ்.நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசேட யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வி.கண்ணன் இவ்வீதியை புனரமைக்கும்படி கோரிக்கையை முன்வைத்தார்.

இதனையடுத்து அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் காரைநகர் சுற்று வீதியினை "காபற்" வீதியாக மாற்ற வேண்டும் என்று பணிக்கப்பட்டது.


அடுத்தவருட ஆரம்பத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தற்போது அதிகாரியினால் உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து வி.கண்ணனால் கோரப்பட்ட இக்கோரிக்கையினை செயற்படுத்த. வசதியாக சுற்று வீதியில் உள்ள பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியன மேற்படி சுற்று வீதியினை அகலிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

# தமிழ்த் தலைவர்களின் இரட்டைமுக அரசியல்

■ சங்கர சிவன்

**சம்பந்தனின் உரைக்குக் கூட்டமைப்புக்கு உள்ளிருந்தே எதிர்ப்புக் கிளம்புவதைச் சம்பந்தனுக்கும் மாவை, சுரேஷ் போன்றவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாட்டின் வெளிப்பாடு என்று சாதாரணமாகக் கூட்டித்தள்ள முடியாது. இது அடிப்படையான அரசியல் முரண்பாடு.**



**கடந்த** 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் சம்பந்தன் கூறிய இரண்டு கருத்துக்கள் அவர் சார்ந்த அரசியல் வட்டாரங்களில் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. புலிகள் பயங்கரவாதிகளாகச் செயற்பட்டார்கள் என்பதும், வடக்கு, கிழக்கி லிருந்து இராணுவம் முற்றாக வெளியேற வேண்டியதில்லை என்பதுமே அவ்விரு கருத்துகளும். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர் மாத்திரமின்றிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் சம்பந்தனின் உரையை நேரடியாகவும், மறைமுகமாகவும் கண்டித்திருக்கின்றனர். சம்பந்தன் தெரிவித்த இரண்டு கருத்துகளையும் இவர்கள் ஏற்கவில்லையெனினும், இராணுவம் தொடர்பான கருத்தையே முன்னிலைப்படுத்தித் தங்கள் எதிர்ப் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

சம்பந்தன் கூறியவற்றை அவை சம்பந்தனின் கூற்று என்பதற்காக நிராகரிக்கக்கூடாது. புலிகள் பயங்கரவாதிகளா இல்லையா என்பது விவாதத்துக்கு அப்பாற்பட்ட விடயம். அப்பாவிச் சிவிலியன்களையும், அரசியல் தலைவர்களையும் பொதுநலச் சேவையாளர்களையும் கொன்று குவித்ததையும் மாற்று இயக்கத் தலைவர்களையும், தொண்டர்களையும் கொலை செய்ததோடு, அந்த இயக்கங்களுக்குத் தடை விதித்ததையும் அரசியல் கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துச் செயற்படாமற் பண்ணியதையும் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்குத் தடை விதித்ததையும் இன்றும் இவை போன்ற பல செயல்களையும் பயங்கரவாதம் எனக் கூறாமல் வேறு எப்படிக் கூறுவது? எல்லா மாகாணங்களிலும் இப்போது இராணுவப் பிரசன்னம் இருக்கின்றது. மேலும், பிரிவினைச் சக்திகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற பின்னணியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து முழுமையாக இராணுவத்தை அரசாங்கம் வெளியேற்றும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, முழுமையாக இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையிலும் பார்க்க நாளாந்த நடவடிக்கைகளில் தலையிடாத அளவுக்கு இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்பதே யதார்த்த ரீதியான கோரிக்கை.

சம்பந்தனின் உரைக்குக் கூட்டமைப்புக்கு உள்ளிருந்தே எதிர்ப்புக் கிளம்புவதைச் சம்பந்தனுக்கும் மாவை, சுரேஷ் போன்றவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாட்டின் வெளிப்பாடு என்று சாதாரண-மாகக் கூட்டித்தள்ள முடியாது. இது அடிப்படையான அரசியல் முரண்பாடு. புலிகளின் தோல்விக்குப் பின்னர் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று சம்பந்தன் இடைக்கிடை கூறி வருகின்றார். சம்பந்தனின் நாடாளுமன்ற உரைக்குக் கண்டனம் தெரிவிக்கும் கூட்டமைப்புக்காரர் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்பதற்கு ஆமாம் சாமி போடுகின்றார்களேயொழியத் தாங்களும் அக்கருத்தை வலியுறுத்திப் பேசுவதற்கு ஒருபோதும் முன்வருவதில்லை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்றால் பத்து வருடங்களாக இவர்கள் பயணித்த தனிநாட்டுப் பாதை தவறானது என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பழைய பாதையை நிராகரிக்காமல் அரசியல் தீர்வுக்கு ஆமாம் சாமி போட்டுக்கொண்டிருப்பது இரட்டைமுக அரசியல். இவர்கள் புலிகள் கால அரசியலைக் கைவிடுவதற்குத் தயாராக இல்லை. அதேநேரம் அதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இல்லை.

சம்பந்தன் கூறிய இரண்டு கருத்துக்களையும் இந்த எதிர்ப்பாளர்கள் ஏற்காத போதிலும் இராணுவம் தொடர்பான கருத்தையே முன்னிலைப்படுத்திப் பிரசாரம் செய்வது ஏன் என்ற கேள்விக்கு வருவோம். தனிப்பட்ட ரீதியாகவும், இனரீதியாகவும் ஏற்பட்ட பாதிப்புகளுக்குப் புலிகளின் பிழையான கொள்கையே காரணம் என்பது பெரும்பாலான தமிழ் மக்களுக்கு இன்று புரிகின்றது. அவர்களிடம் சென்று வெளிப்படையாகப் புலிகளுக்கு வக்காலத்து வாங்குவது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இத்தலைவர்கள் அடக்கி வாசிக்கின்றனர். அதேநேரம் மாணவர்களையும் இளைஞர்களையும் உசுப்பிவிட்டுப் புலிசார்புச் செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதன் மூலம் மக்கள் மத்தியில் மெல்ல மெல்லத் தங்கள் கருத்தைப் புகுத்த முயற்சிக்கின்றார்கள்.

இராணுவம் பற்றிய எதிர்ப்புணர்வு தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. தமிழரசுக் கட்சியினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் மேடைகளில் பேசப்பட்ட ஆவேசப் பேச்சுகளும் இராணுவத்தினரின் சில செயற்பாடுகளும் இந்த எதிர்ப்புணர்வுக்குக் காரணம் என்று கூறலாம். இந்த உணர்வலைக்கு மத்தியில் இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை வெகுஜன விருப்புக் கோரிக்கையாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வெகுஜன விருப்புக் கோரிக்கைகள் யதார்த்த ரீதியானவையாகவும் இருக்கலாம். யதார்த்தத்துக்கு முர-ணானவையாகவும் இருக்கலாம். இராணுவம் முழுமையாக வெளியேற வேண்டும் என்பது யதார்த்தத்துக்கு முரணான வெகுஜன விருப்புக் கோரிக்கை. ஆனால், மக்களை அணி திரட்டுவதற்கு வசதியான கோரிக்கை. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்களின் ஒரே நோக்கம் மக்களை அணி திரட்டுவதே என்பதால் இக்கோரிக்கையை அவர்கள் முன்னிலைப்படுத்துகின்றார்கள்.

**தங்கள் அரசியல் பதவிகளைத் தக்கவைக்கும் சுயநல நோக்கத்துக்காகவே மக்களை அணிதிரட்டுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிப்பதானால் அந்த நிராகரிப்பைச் செயலில் காட்டவேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து மக்களை அணிதிரட்ட வேண்டும். செய்வார்களா?**

மக்களை எதற்காக அணிதிரட்டுகின்றார்கள் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அரசியல் கட்சிகள் மக்களை அணிதிரட்டுவதுவழமையான நிகழ்வு. அதற்கான உரிமை எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உண்டு. ஆனால்; எதற்காக மக்கள் அணி திரட்டப்படுகின்றார்கள் என்பது தான் முக்கியமானது. மக்களின் நலனுக்காக அல்லாமல் தலைவர்களின் நலனுக்காக அணி திரட்டுவது காட்டு அரசியல். காட்டில் மிருகங்கள் சுயநலநோக்கிலேயே செயற்படுகின்றன.ஒவ்வொரு மிருகமும் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்கும். இங்கு ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரிலும் வேறு விதத்திலும் தமிழ் தலைவர்கள் மக்களை அணி திரட்டுவது சுயநலநோக்கத்துக்காகவே.

ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு பிரச்சினையை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். இந்த ஆர்ப்பாட்டங்களில் அரசாங்கத்துக்கு எதிராகவும் இராணுவத்துக்கு எதிராகவும் தங்களுக்கு மாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும் கடுமையான கண்டன உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. ஏதோ பெரிதாகச் சாதிக்கப்போவதாக மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் பேசுவார்கள். ஆனால், உருப்படியாக எதுவுமே நடப்பதில்லை. எந்தப் பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டம் செய்தார்களோ அந்தப் பிரச்சினையின் தீர்வுக்காக எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஆர்ப்பாட்டங்களுடன் இவர்களின் பொறுப்பு முடிந்துவிடுகின்றது.

உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள் செய்யக்கூடாது என்று எவரும் கூறமுடியாது. ஆனால், அந்த ஆர்ப்பாட்டங்கள் மக்களின் நலன் சார்ந்தவையாக இருக்கவேண்டும். அதாவது மக்களுடைய பிரச்சினைகளின் தீர்வுக்கு வழிகாட்டுபவையாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் எல்லாப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினையிலிருந்தே தோன்றுகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் இப்பிரச்சினைகள் தோன்றுவதற்கு இடமில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரை உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாக எதுவும் செய்யக்கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. உடனடிப் பிரச்சினைகளுக்கான ஆர்ப்பாட்டங்களின்போது இனப்பிரச்சினையின் தீர்வும் வலியுறுத்தப்பட வேண்டும். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கையும் முன்வைக்கப்பட வேண்டும். அப்போது தான் தங்கள் பிரச்சினைக்கான தீர்வு எது என்ற தெளிவு மக்களுக்கு ஏற்படும். பிரச்சினைக்கான தீர்வு எது என்று தெரியாத நிலையில் மக்களை அணிதிரட்டுவது அவர்களைத் தவறாக வழிநடத்துவதாகும்.

தங்கள் அரசியல் பதவி-களைத் தக்கவைக்கும் சுயநல நோக்கத்துக்காகவே மக்களை அணிதிரட்டுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிப்பதானால் அந்த நிராகரிப்பைச் செயலில் காட்டவேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து மக்களை அணிதிரட்ட வேண்டும். செய்வார்களா? ●

# நாடாளுமன்ற விடயங்களில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது

## சவால் விடுகின்றார் யாப்பா



(கொழும்பு)

அதியுயர் அதிகாரங்களைக் கொண்டது நாடாளுமன்றமே என்றும் நாடாளுமன்றின் செயற்பாடுகளில் எவரும் தலையிட முடியாது என்று அமைச்சர் பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் அதிகாரங்களுக்கு எவராலும் சவால் விடுக்க முடியாது.

நாடாளுமன்றின் அதிகாரங்கள் குறித்த உரிமைகளுக்கு எவரும் சவால் விடுக்க முடியாது. நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

நாடாளுமன்ற செயற்பாடுகளில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியும் என நான் கருதவில்லை. அரசியலமைப்பின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டும்.

இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நீதிமன்ற அழைப்பாணை குறித்து கருத்து வெளியிடுவது பொருத்தமாகாது என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

# வினாத்தாள்கள் வெளியே கசிந்ததா? ஆணையாளரிடம் தீவிர விசாரணை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதார சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் கசிவு தொடர்பில் பரீட்சை ஆணையாளரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பரீட்சை ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட 12 பேரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

சாதாரண தரப் பரீட்சையின் கணிதம் மற்றும் விஞ்ஞான பாட வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடாத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளனர்.

# சீனாவின் மோசடிக் கும்பல் சிக்கிக்கொண்டது கொழும்பில்



(கொழும்பு)

இணையத்தை பயன்படுத்தி பணமோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக சீனர்கள் 100 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம் மோசடி குறித்து சீன பொலிஸார் வழங்கிய தகவலினை தொடர்ந்து குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்படி சீனர்களை கைது செய்துள்ளனர்.

இணையத்தை பயன்படுத்தி சீனக் கணக்குகளிலிருந்து பணமோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக 100 சீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி. பிரசாந்த ஜயக்கொடி டெய்லிமிரருக்கு தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடுசெய்திருந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

# அரசியல் அமைப்பையும் தாண்டி உயர்நீதிமன்றம் செயற்படவில்லை

## பதிலடி கொடுக்கிறார் திஸ்ஸ



(கொழும்பு)

அரசியலமைப்பே நாட்டின் அதி உயரிய சட்டமாகும் என்பதனால் அது தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். குற்றப் பிரேரணை தொடர்பில் அரசியலமைப்புக்கு இயைபாக நீதிமன்றம் வியாக்கியானத்தை வழங்கியுள்ளது என்று திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர மேற்கண்டவாறு தெரிவிததார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசியலமைப்பை உயர் நீதிமன்றத்தினால் மட்டுமே வியாக்கியானத்திற்கு உட்படுத்த முடியும். உயர்நீதிமன்றமானது மாகாணத்தில் பிரத்தியேகமாக உள்ளது. நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகியன ஆட்சியின் மூன்று தூண்களாகும்.

இவ்வாறான நிலையில் அரசியலமைப்பை உயர்நீதிமன்றத்தினால் மட்டுமே 'வியாக்கியானத்திற்கு உட்படுத்த முடியும். அந்த வியாக்கியானத்தை இறைமையுள்ள நாட்டில் வாழ்கின்ற சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

# ஆஸி. நோக்கிய பயணம் மேலும் ஒரு தொகுதியினர் கைது

(கொழும்பு)

மற்றுமொரு தொகுதி சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் குறித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் செல்ல முற்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படகில் சிங்களவர்களும் தமிழர்களும் பயண செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் முத்துவில் மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், மாரவில, நீர்கொழும்பு, சிலாபம், வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையின் விண்வெளிக்கனவு விரைவில் நனவாக மாறும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை

(கொழும்பு)

இன்னும் 5 ஆண்டுகளில் தனது முதலாவது விண்வெளி வீரனை இலங்கை அனுப்பும் என்று விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்தார்.

இலங்கையின் முதலாவது தொலைத்தொடர்பு செயற்கைக் கோளான (செற்றலைட) "சுப்றீம்செற்-I யை " இலங்கையானது சீனாவுடன் இணைந்து நவம்பர் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.43 மணிக்கு விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவியது.

சீனாவின் சீசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்ட இந்த செயற்கைக்கோளானது தனது ஆரம்ப வயதிலேயே இருக்கின்றது என்றார்.

# தொழில்நுட்பப் பகிர்வு ஆப்கானுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

யுத்தத்தால் அழிவடைந்த ஆப்கானிஸ்தான் நாட்டைக் கட்டியெழுப்புவற்கு துறை சார்ந்த வல்லுநர்களையும், திறமையான தொழிலாளர்களையும் பரிமாறிக்கொள்வதற்கு அரசு முடியு செய்திருக்கிறது.

ஆப்கானிஸ்தானை மீளக் கட்டியெழுப்புவதற்கும் நாட்டிலுள்ள கலைச் சொத்துக்களை மீளமைக்கவும் பங்களிக்கும் வகையில் பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்ப இலங்கை அரசாங்கம் உடன்பட்டுள்ளது என ஒரு கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் சல்மைய் றசூல் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரிடையே கொழும்பில் நடைபெற்ற சந்திப்பை அடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தின்போது ஆப்கானிஸ்தானில் தொழில் வாண்மையுடையோரையும் பயிறப்பட்ட மனித வளத்தையும் உருவாக்க வேண்டிய தேவையும் வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பில் இருபக்க உடன்படிக்கை ஒன்றை இலங்கை முன்மொழிந்துள்ளது. இலங்கை பல்கலைக் கழகத்தில் ஆப்கானிஸ்தான் மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல், விவசாயம், தொழில் நுட்பம ஆகிய கற்கைகளில் கூடுதல் இடம் தரும்படி ஆப்கானிஸ் தான், இலங்கை அரசாங்கத் திடம் கேட்டுள்ளது.

இதற்கு சாதகமாக இலங்கை பதிலளித்துள்ள நிலையில், கட்டணம் அறவிடும் அடிப்படையில் கூடுதல் இடங்களை வழங்க இலங்கை சம்மதித்தது. அத்துடன், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இலவசமாக இருவரை பயிற்றவும் இலங்கை முன்வந்தது என கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குவிந்தது தொலைபேசி அழைப்புக்கள் திணறியது வளிமண்டலவியல் திணைக்களம்

உலக அழிவு தொடர்பில் அறிந்துகொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் காரணமாக வளிமண் டல வியல் திணைக்களம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டதாக வளிமண்டலவியல் திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உலக அழிவு தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட வதந்தி மற்றும் பொய்ப் பிரசாரங்களை நம்பி அச்சமடைந்த மக்கள் இவ்வாறான தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலக அழிவுக்கு வழிவகுக்கும் இயற்கை அனர்த்தங்கள் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் அறிந்துகொள்வதற்காக மேற்படி மக்கள் நேற்று முன்தினம் பெருமளவிலான தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தியிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சில இணையத் தளங்கள் உலக அழிவு தொடர்பிலான வதந்திகளைப் பரப்பி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

# இந்திய வீடமைப்புத்திட்டம்

# ஊர்காவற்றுறையில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

இந்திய வீட்மைப்புத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்கள் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அவர்கள் இந்திய வீட்டுத்திட்டத்தின் நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளித்ததுடன், பயனாளிகள் தெரிவின் போது முறைகேடுகள் நிகழா வண்ணம் தெரிவினை மேற்கொள்வதுடன் பயனாளிகள் தெரிவு மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.


இக் கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் எழிலரசி, ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை பிரதேச இணைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளருமான ம.ஜெயகாந்தன் (காந்தன்), இலங்கை செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், பயனாளிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தீர்வுகாணக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பதவி நிலை வெளிக்கள உத்தியோகத்தர்களான சமூகசேவைகள் உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அதனைச சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களின் பதவித்தரம் சம்பளம் தொடர்பான புதிய சுற்றுநிரூபம் வெளியாகியுள்ளது.

இதில் காணப்படும் முரண்பாடுகள் தொடர்பாக தீர்வைக் காணும் முயற்சிகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நகரிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.



புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் அண்மையில் நீதி அமைச்சினால் நடாத்தப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்து தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்பாளராக யாழ். மாவட்ட நீதிபதி எ.எ. ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (03)

# நூலக புதிய கட்டடத்திற்கு பால் காய்ச்சும் வைபவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைப் பொது நூலகத்திற்கு புதிதாத நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன பொது நூலகக்கட்டடத்தின் பால்காய்ச்சும் சம்பிரதாய பூர்வ நிகழ்வு நகரசபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை - தும்பளை வீதியில் முன்னர் நகரசபையின் மயில் வாகனம் பொது நூல் நிலையம் அமைந்திருந்த இடத்திலேயே இப்புதிய நவீன பொதுநூலகமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்நவீன பொதுநூலகக்கட்டட நிர்மாணத்திற்கான நிதி 77 இலட்சம் ரூபா என்றிப். திட்டத்திலிருந்து பெறப்பட்டிருந்தது.

சம்பிரதாயமாகப் பால்காய்ச்சப்பட்ட நவீன பொது நூலகக் கட்டடத்தை எதிர்வரும் 18ஆம் திகதி பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திறந்து வைப்பாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# முரசின் இன்றைய பலன்

(23.12.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 08 ஆம் திகதி. நட்சத்திரம் அச்சுவினி மாலை 6.30 வரை. திதி ஏகாதசி முழுவதும்.
இராகுகாலம் 4.56 - 6.26 வரை.
சுபநேரம் 9.26 - 10.56 வரை. ஏகாதசி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் குளறுபடி வரும். போக்குவரத்தில் கவனம். புது முயற்சிகள் வேண்டாம். பணவரவில் தாமதநிலை இருக்கும். ஓய்வு உடல்நலம் காக்கும். புத்திரரால் மகிழ்ச்சி. |
| ரிஷபம் | ஊக்கம் உயர்வு தரும். தொழில் திட்டமிட்ட இலக்கை அடைய மாற்று வழிகள். பணவரவும், நன்மையும், அதிகரிக்கும். போக்குவரத்தில் கவனம். குடும்பம் அனுசரணை. |
| மிதுனம் | அதிகம் ஆசைப்பட வேண்டாம். பணிகளில் சிரமம். முன்யோசனை வெற்றி தரும். வரவை விட செலவு. ஆபத்தான இடங்களில் நுழைய கூடாது. பொருட்கள் கவனம். |
| கடகம் | சுறுசுறுப்பு. சூழ்நிலை அனுகூலம். திட்டமிட்டு உழைத்து தொழிலில் வளம் பெறுவீர்கள். தாராள பணவரவு. மதிப்பும் மரியாதையும் பெறுவீர்கள். விருந்து. புது முயற்சிக்கும் பலன். |
| சிம்மம் | சாதகமான நிகழ்வுகள். நண்பர், உறவினர்கள் உதவி. தொழில் வளர்ச்சி. கூடுதல் உழைப்பு. லாபவிகிதம் கூடும். புத்திரரால் மகிழ்ச்சி. சான்றோரின் ஆசி. மாணவர் தேர்ச்சி. |
| கன்னி | அதிக ஆசை உண்டாகும். நிறைய உழைப்பீர்கள். செலவு. பயணத்திட்டத்தில் மாறுதல். தொழிலில் போட்டி. மாற்று உபாயத்தால் நன்மை. குடும்ப சச்சரவு வந்து நீங்கும். |
| துலாம் | நண்பர், உறவினர்களுக்காக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த ஒன்று விலகிச் செல்லும். உழைப்பு துணை நிற்கும். தொழிலில் சாதனை. சொத்து சேர்க்கை. தெய்வ வழிபாடு. |
| விருச்சிகம் | முன்யோசனை. அனுகூல சூழ்நிலை. அறிமுகம் இல்லாதவரிடம் விலகுங்கள். தேவையான பணவரவு. பயண திட்டத்தில் மாறுதல். குடும்பத்தில் ஆதரவு. விவேகத்தால் வெற்றி. |
| தனுசு | கலைரசனை. இயற்கை அழகில் மகிழ்வு. பணியில் நேர்த்தி. பணவரவும், பரிசுகளும். வாகன கவனம். குடும்பத்திற்கு பொருள் வாங்குவீர்கள். நண்பர், உறவினர்களின் வாழ்த்து. |
| மகரம் | நிதானம் நன்மை தரும். பெருமை சேரும். வேலையில் கூடுதல் ஈடுபாடு. வியாபாரம் சராசரி. பணவரவுக்கு காத்திருப்பு நிலை. வாக்குவாதம் தவிர்க்கவும். தோல்விமனம் மாறும். |
| கும்பம் | சிந்தனை, செயலில் புத்துணர்ச்சி. தொழிலில் முன்னேற்றம். அளவான பணவரவு. துணையின் வழியில் உதவி. பிணி தொந்தரவு குறையும். பக்தி ஈடுபாடு. கல்வியில் உயர்வு. |
| மீனம் | நற்செயல்கள் புரிவீர்கள். அனுபவசாலியின் உதவி. தொழிலில் இடர்விலகும். பதவி, அந்தஸ்து உயரும். பணவரவுக்கு ஏற்ப செலவுகள். பாதுகாப்பில் கவனம். விருந்துக்கு அழைப்பு. |

# உணவுக்கான வேலைத்திட்டம்; தீருவில் குளம் ஆழமாக்கப்பட்டுள்ளது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தீருவில் குளத்தை ஆழமாக்குதல் அகலமாக்கும் வேலைத்திட்டத்தில் பங்களித்த மக்களுக்கான நிவராண உதவியை உலக உணவு திட்டத்திலிருந்து தீருவில் விளையாட்டுக்கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

இவ் வேலைத்திட்டத்துக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வு வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் உள்ள தனியார் வீட்டில் வைத்து தீருவில் விளையாட்டுக்கழக தலைவர் பொ.ஈஸ்வரலிங்கம், கழகச் செயலாளர் சு.வெற்றிவடிவேல் கழக உறுப்பினர் வி.பரமேஸ்வரன் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் ந.அனந்தராஜ் ஆகியோர் அம்மக்களுக்கு வழங்கியிருந்ததாகவும் தெரியவருகின்றது.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் உள்ள வயலூர் முருகன் ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள இக் குளத்தை உலக உணவுத்திட்டத்தின் கீழ் சுமார் 9 இலட்சம் ரூபா செலவிலும் வல்வெட்டித்துறை நகரசபையின் பங்களிப்பு நிதியிலும் குளத்தை ஆழமாக்கும் மற்றும் அகலமாக்கும் வேலைத்திட்டம் ஒன்றரை மாதகாலம் நடைபெற்றது.

இதற்கு குறித்த பகுதி மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கியதாக இத்திட்டத்திலிருந்து நாளோன்றுக்கு ஒருவருக்கு 2 1/2 kg அரிசி, 400g கௌபி, 150g மரக்கறி எண்ணை உள்ளிட்ட உலர் உணவுகளை 102 பேருக்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குளத்தை ஆழமாக்கி அகலமாக்கி மற்றும் அகலமாக்கிய மண்ணைக் கொண்டு தீருவில் விளையாட்டுக் கழகமைதானம் சற்று உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் உலக உணவு திட்ட வேலைத்திட்டத்தில் நிவாரணம் வழங்கும் நிகழ்வில் உலக உணவு நிறுவன அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (116)

# குப்பைகளை அகற்றாத பிரதேசசபை சட்டநடவடிக்கைகளுக்கு உட்படும் மக்கள்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்கரையோரப்பிரதேசங்களில் அரச சார்பற்ற நிறுவனத்தினால் கட்டிக்கொடுக்கப்பட்ட குப்பை தொட்டிகளில் போடப்படும் கழிவுகள் பிரதேசசபையால் அகற்றப்படாததால் கழிவுப் பொருட்களில் உள்ள முகவரிகள் மூலமாக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைப் பகுதியின் சுப்பர்மட பிரதேசத்தில் சுனாமிகாலப்பகுதியில் கடற்கரையோரத்தை அண்டிவாழும் மக்களின் சுகாதார நலனைப் பேணும் பொருட்டு நெக்டப் மற்றும் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான இணை நிறுவனங்களினால் சுமார் 100 மீற்றர் இடைவெளிகளில் கடற்கரையோரங்களில் குப்பைத் தொட்டிகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. குறித்த பகுதி வாழ் மக்கள் பல இட நெருக்கடிகளில் வாழும் சமயம் வீடுகளில் நாளாந்தம் சேர்க்கப்படும் கழிவுப் பொருட்களை பல வருடமாக அக்குப்பைத் தொட்டிகளிலே கொட்டி வருகின்றனர்.

எனினும் தற்போது குப்பைகள் நிரம்பி வீதியோரத்தில் மிருகங்களினால் கிளறி விடப்பட்டும் மழைகாலத்தில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் குறித்த பகுதி வீதியால் பயணிப்போர்களான பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் பல சிரமங்களுக்கு மத்தியில் மூக்கை பொத்தி செல்கின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது. இக்குப்பை தொட்டிகளில் போடப்படும் கழிவுப்பொருட்கள், குப்பைகளை பிரதேச சபையினர் அகற்றாத பட்சத்திலே அவ்வூர் மக்களால் மேன்மேலும் கொட்டப்படும் கழிவுகளையும் கடிதம், வீட்டு மரக்குப்பைகளை அடையாளமாக இனம் கண்டு அவர்களுக்கு எதிராக பருத்தித்துறை சுற்றுசூழல் பொலிஸார் சட்டத்தின் முன்நிறுத்தி குற்றப்பணம் அறவிட்டு வருகின்றனர். (116)

# தென்னாபிரிக்கா வெற்றி

(டர்பன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் டர்பனில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நியூசிலாந்து அணி 18.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கொலின் முன்ரோ 23, பிரேஸ்வேல் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரோறி கிளெய்ன்வெல்ட் மூன்று, ரொபின் பீற்றர்சன், ஸ்டெயின், மொரிஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 87 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 12.1 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டு பிளிசர் 38, குயின்டன் டீ கொக் 28 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக கெகின்வைல்வெட் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்றைய தினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விலை மாதாக மாறிய ஒலிம்பிக் வீராங்கனை




(வோஷிங்டன்)

மூன்று முறை ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் பெறும் வாய்ப்பைத் தவறவிட்ட அமெரிக்க வீராங்கனை சூரி பெவர் ஹாமில்டன், மறைமுக விபச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1992 பார்ச்லோனா ஒலிம்பிக் போட்டி, 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டி, 2000 சிட்னி ஒலிம்பிக் போட்டி ஆகியவற்றில் ஓட்டப்பந்தய வீராங்கனையாக பங்கேற்றவர் சூசி பெவர் ஹாமில்டன். முதல் இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிவாய்ப்பைத் தவறவிட்ட இவர், 2000ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், 1500 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெறும் தகுதிவாய்ந்த வீராங்கனைகளில் ஒருவராக கருதப்பட்டார்.

எல்லைக்கோட்டை தொடுவதற்கு 150 மீற்றர் தூரமே இருந்த நிலையில், சுவாசக் கோளாறு ஏற்பட்டு மேற்கொண்டு ஓட முடியா-மல், தடுமாறி விழுந்த சூசி பெவர் ஹாமில்டன் மூன்றாவது முறையும் வெற்றிவாய்ப்பை நழுவவிட்டார். அதன் பின்னர் நடந்த ஒலிம்பிக் போட்டிகள் எதிலும் பங்கேற்காமல், திருமணம் செய்துக்கொண்டு 7 வயது பெண் குழந்தைக்கு தாயாக உள்ள ஹாமில்டன், குடும்ப பொறுப்புகளை கவனித்துக் கொண்டு, உபரியாக ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டு வருவதாக கூறப்பட்டது. தற்போது, 44 வயதாகும் ஹாமிமல்டண், லாஸ் வேகாஸ் நகரில் எஸ்கார்ட் எனப்படும் மறைமுக விபச்சாரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், இதற்காக ஒரு மணி நேரத்திற்கு 600 அமெரிக்க டொலர்களை கூலியாக வாங்குவதாகவும் அமெரிக்காவின் பிரபல இணையதளம் ஒன்று, படங்களுடன் செய்தி வெளியிட்டது.

இதனை ஒப்புக்கொண்டுள்ள ஹாமில்டண், தனது டுவிட்டர் வலைப் பக்கத்தில் கூறியுள்ளதாவது:- எனது திருமண வாழ்வில் ஏற்பட்ட தோல்வி மற்றும் விரக்தியை சரிசெய்துக்கொள்ளும் முயற்சியில் நான் தவறான பாதையில் சென்றுவிட்டேன். இது மிகப்பெரிய தவறு என்பது தெரிந்தே இதில் நான் ஈடுபட்டேன். என்னை யாரும் இந்த தொழிலில் பலியாக்கி விடவில்லை. எல்லாவற்றிற்கும் நானே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்த விவகாரம், வெளியே யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை என நான் கருதினேன். இப்போது நினைத்துப் பார்த்தால் நான் தவறான காரியத்தை செய்துவிட்டதாக உணர்கின்றேன். எனது செய்கையின் மூலம் காயப்பட்டவர்களிடம் எப்படி மன்னிப்பு கேட்பது என்றே எனக்குப் புரியவில்லை. எனது குடும்பத்தாரின் அன்பைப் பெற என் தவறுகளை திருத்திக்கொள்ள நினைக்கின்றேன். ஒரு நல்ல தாயாக, மனைவியாக, மகளாக, தோழியாக எனது உறவுகளை புதுப்பித்துக்கொள்ள விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

## அதிகரித்தது பரிசுத் தொகை




(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிசில் வீர, வீராங்கனைகளுக்கு பரிசுத் தொகை, வரலாறு காணாத வகையில் உயர்த்தப்பட்டது.

வரும் 2013 ஜன்வரியில் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடர், மெல்போர்னில் நடைபெறவுள்ளது. இதில் அதிக வருமானம் கிடைப்பதால், பங்கேற்கும் வீர, வீராங்கனைகளுக்கு பரிசுத் தொகையை சற்று உயர்த்தி தர வேண்டும் என முன்னணி வீரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தவிர, நீண்ட தொலைவில் இருந்து வந்து பங்கேற்று, முதல் சுற்றுடன் வெளியேறும் வீரர்களுக்கு கிடைக்கும் பணம் குறைவாக இருந்தது. இதை சரிசெய்யும் வகையில் இந்த ஆண்டு பரிசுத் தொகை உயர்த்தப்பட்டது. இதன்படி, ரூ. 150 கோடியில் இருந்த மொத்தத் தொகை, இந்த ஆண்டு ரூ. 172 கோடியாக உயர்த்தப்பட்டது.

முதல் சுற்றில் தோற்றால் ரூ. 16 இலட்சம் கிடைக்கும். இது கடந்த ஆண்டை விட 32.7 சதவீதம் அதிகம். ஒவ்வொரு வெற்றிக்கும் இது அப்படியே இரண்டு மடங்காகும். காலிறுதியில் தோற்பவர்கள் ரூ. 1.43 கோடியும், அரையிறுதி எனில், ரூ. 2.87 கோடியும் கிடைக்கும். கோப்பை வென்றால் ரூ. 14 கோடி பரிசாக கிடைக்கவுள்ளது. இரண்டாவது இடம் பெற்றால் ரூ. 7 கோடி வரை கிடைக்கும்.

இதேவேளை, இப்போட்டித் தொடரிலிருந்து ரஷ்ய முன்னணி வீராங்கனை 28 வயதான விராஸ்வோனரிவா விலகியுள்ளார். வலது தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வருவதால் தன்னால் இந்த போட்டியில் விளையாட இயலாது என்று அவர் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

# நாங்கள் ரெடி




(சிட்னி)

இலங்கை அணியின் வீரர்களான டில்சான், திலான் சமரவீர ஆகியோர் டெஸ்ட் அணியிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து ஆலோசனை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்ரேலிய அணியுடன் நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரை அடுத்து தமது ஓய்வு குறித்து ஆலோசிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கும் வகையிலேயே இந்த முடிவை தான் யோசிப்பதாக டில்சான் தெரிவித்தார்.

இதனிடையே, பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்பே அணிகளுக்கு இடையே இடம்பெறவுள்ள போட்டியில் புதிய வீரர் ஒருவருக்கு வாய்ப்பு வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# வெளியானது ஐ.பி.எல். அட்டவணை

(புதுடில்லி)

இந்திய பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி தொடங்கும் ஐ.பி.எல். போட்டியின் முதல் ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, டில்லி டேர் டெவில்ஸ் அணியுடன் மோதவுள்ளது. இப்போட்டி ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறுகிறது. 6ஆவது ஐ.பி.எல். போட்டியை குளிர்பான தயாரிப்பு நிறுவனமான பெப்ஸி நடத்துகிறது. கடந்த முறை பங்கேற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி, சன்ரைசர்ஸ் என்ற புதிய பெயரில் புதிய நிர்வாகத்தின்கீழ் இம்முறை களமிறங்குகிறது. ஏப்ரல் 5ஆம் திகதி நடைபெறவுள்ள ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் அணி, புனே வாரியர்ஸ் அணியுடன் மோதுகிறது. 2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியின் அடிப்படையிலே இப்போட்டியும் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்கேற்கும் 9 அணிகள், மற்ற அணிகளுடன் இருமுறை மோதும். லீக் சுற்றுகளில் அணிகள் பெறும் புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறும். இப்போட்டிகள் முறையே சென்னை மற்றும் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளன.

# வருடாந்த ஒன்றுகூடல்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் இன்றைய தினம் காலை 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது ஸ்ரான்லி அணிக்கும், மத்தியஸ்தர் 11 பேர் அணிக்குமிடையிலான ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளதாகவும், இதில் அனைத்து மத்தியஸ்தர்களையும், ஒன்று கூடலிலுல், போட்டியிலும் யாழ். மாவட்ட மத்தியஸ்தர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட மத்தியஸ்தர் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். (17)

இத்தாலியில் உள்ள டோலோமிட்சில் நடைபெற்ற உலகக் கிண்ண பனிச்சறுக்குத் தகுதிச்சுற்றில் அசத்தலாக சறுக்கி தனது திறமையை வெளிப்படுத்திய உக்ரைனின் டிமிட்ரிவ்வைக் காணலாம். இப்போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# நம்பிக்கை இழந்துவிட்டோம்



இலங்கைக் கிரிக்கெட் சபை மேல் தான் நம்பிக்கையிழந்து விட்டதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு அவர் அனுப்பிய இரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்டதையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். உலக ருவென்ரி-20 தொடரில் இலங்கைக்கு பயிற்சிகளை வழங்கிய பயிற்றுவிப்பாளர் மற்றும் ஏனைய ஊழியர்கள் சிலருக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குமாறு இலங்கக் கிரிக்கெட் அணியினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்திருந்த இலங்கைக் கிரிக்கெட் சபை, அதுகுறித்து ஊடகங்களுக்கு விளக்கங்களை வழங்கியிருந்தன.

உலக ருவென்ரி-20 தொடரில் பங்குபற்றியமைக்காக இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு சர்வதேசக் கிரிக்கெட் சபை வழங்கவுள்ள தொகையின் 25 சதவீதம் இலங்கையின் 15 வீரர்களுக்கு வழங்கப்படுவது ஒப்பந்தப்படி கட்டாயமென்ற போதிலும், இலங்கையின் பயிற்றுவிப்பாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஊக்குவிப்பினை வழங்குமாறு மேற்கொண்ட கோரிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபை, இலங்கை வீரர்கள் அனைத்து பயிற்றுவிப்பாளர்களையும் அந்தக் கோரிக்கையில் இணைத்திருக்காததோடு, அதுகுறித்து ஏற்கனவே திட்டமிடல்கள் காணப்படாததால் அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்தன, இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு இரகசியமான முறையில் வீரர்கள் மேற்கொண்ட கோரிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக வீரர்கள் அவமானப்படுத்தப்பட்டிருப்பதாகவும், இதன் காரணமாக இலங்கைக் கிரிக்கெட் சபை மேல் நம்பிக்கையிழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளார். இலங்கை அணியோடு இணைந்து செயற்பட்ட முகாமைத்துவ அணிக்கும், பயிற்றுவிப்பாளர்களுக்கும் அவர்களது அர்ப்பணிப்பைப் பாராட்டி ஊக்குவிப்பு வழங்குமாறே கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்த மஹேல, 2007ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திலிருந்து இந்த நடைமுறை காணப்படுவதாகவும், புதியதொன்றல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

# உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கைப்பந்து பயிற்சி



(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கைப்பந்து பயிற்சி முகாம் கடந்த வாரம் ஓமந்தை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் வவுனியா வடக்கு உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்கள் பலர் பங்குகொண்டனர். இதன்போது கைப்பந்து குறித்து முழு விளக்கங்களும் அளிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு எவ்வாறான முறையில், கைப்பந்து கற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் கைப்பந்துப் போட்டி அடுத்த ஆண்டு முதல் பாடசாலைகளுக்கிடையில் புதிய போட்டியாக சேர்க்கப்பட்டு நடைபெறவுள்ளது. அதனை கருத்தில் கொண்டு வவுனியா கல்வி வலயத்தினால் இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டதாக வவுனியா கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இப்பயிற்சி முகாம் பயனுள்ளதாக இடம்பெற்றது எனவும், வவுனியா வலயத்தைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் அடுத்த ஆண்டு இடம்பெறும் பாடசாலை மட்ட கைப்பந்துப் போட்டியில் முத்திரை பதிப்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (12)






## மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் உபதலைவரும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கிரிக்கெட் அபிவிருத்திக் குழுத் தலைவரும், ஈஸ்ட் வெஸ்ட் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான எஸ்.மதிவாணனினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு ரூபா 5 இலட்சம் நிதி கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கிரிக்கெட் சங்கத்திலுள்ள அங்கத்துவக் கழகங்களின் வளர்ச்சிக்கென, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் எஸ்.விமல தாஸனிடம் மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிடைக்கப்பெற்ற நிதியினைக் கொண்டு யாழ்ப்பாண விளையாட்டுக்கழகங்கள் சிலவற்றிற்கு வலைப்பயிற்சி மேற்கொள்வதற்கான திடல் அமைக்கப்படவுள்ளதாகவும், எந்த கழகங்களுக்கு வலைப்பயிற்சி திடல் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக்கெட் நெற் அலுவலகத்தில் நடைபெற்றதாகவும் யாழ்.மாவட்டத் துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிதி மூலம் யாழ். மாவட்ட கிரிக்கெட் வீரர்களை வளர்க்கும் என தாம் நம்புவதாகவும், இது போன்ற உதவிகள் மேலும் கிடைக்கப்பெறும் இடத்து விரைவில் நல்ல முன்னேற்றத்தை அடையலாம் எனவும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## சுந்தரபுரம் ஜீ.ரி.எம்.எஸ். பாடசாலை வீரருக்கு கொழும்பில் மேசைப்பந்து பயிற்சி



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் தலைசிறந்த மேசைப்பந்தாட்ட வீரர் ஏ. ஸ்டென்லி தற்போது ஒரு மாத கால பயிற்சிக்காக கொழும்பு பயணமாகியுள்ளார்.

இவரின் பயிற்சியாளரான வீ. டபிள்யூ. ஜெயநேசன் உடன் இவர் பயிற்சி பெறுவார்.

சுந்தரபுரம் ஜீ.ரி.எம்.எஸ் பாடசாலையில் கல்வி பயிலும் இவருக்கு வயது 14. யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் பல மேசைப்பந்தாட்ட போட்டிகளில் இவர் விளையாடியுள்ளார். மேல் மாகாண மேசைப்பந்தாட்ட கனிஷ்ட குழு வீரர்களுடன் இவர் பயிற்சி பெற்று வருகிறார்.

ஸ்டென்லியுடன் யாழ். மாவட்டத்தில் மற்றுமொரு சிறந்த மேசைப்பந்தாட்ட வீரரான எம். அகஷானும் பயிற்சிக்குத் தெரிவாகியுள்ளார்.

"STIGA TT BRAND" நிறுவனம் ஸ்டென்லியின் அனுசரணையாளராக இருவருடங்களுக்கு இருக்கும். ரல்ஹூம் டிரேடிங் நிறுவன உரிமையாளர் முஹம்மத் இவருக்கு அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு சென்ற ஸ்டென்லியை விளையாட்டுத்துறை அமைச்சர் சந்தித்து கலந்துரையாடியதுடன், நினைவுப் பரிசும் வழங்கிக் கௌரவித்தார்.

அத்துடன் கிராமப் புறங்களிலிருந்து விளையாட்டு வீரர்களை வெளிக் கொணர்வதே எமது நோக்கம் என்றும், அந்த வகையில் இவர் போன்ற வீரர்கள் இன்னும் இனங்காணப்படாமல் பலர் உள்ளனர் என்றும், அவர்களையும் விரைவில் இனங்கண்டு வெளிக் கொணர்வதே எமது முதல் கடமையாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## வென்றது ஆர்சனல்

ரேடிங் அணிக்கு எதிரான பிறீமியர் லீக் கால்பந்து தொடரின் லீக் போட்டியில் ஆர்சனல் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இங்கிலாந்தில் நடைபெறும் பிறீமியர் லீக் கால்பந்து தொடரின் லீக் போட்டியில் ஆர்சனல்- ரேடிங் அணிகள் மோதின. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஆர்சனல் அணிக்கு லூகாஸ் 14ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இதையடுத்து சண்டி 32 மற்றும் 34 நிமிடங்களில் இரண்டு கோல்களை அடித்தார். இதற்கு ரேடிங் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இந்நிலையில், இரண்டாவது பாதியில் ஆர்சனல் அணியின் சண்டி 60ஆவது நிமிடத்தில் மீண்டுமொரு கோல் அடித்தார். ரேடிங் அணிக்கு ஆதம் 66ஆவது நிமிடத்திலும் ஜிம்மி 71ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். தியோ வல்கோட் 80ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து ஆர்சனல் அணியின் வெற்றியை உறுதி செய்தார். இதையடுத்து ஆர்சனல் அணி 5-2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

## வாய்ப்பு பெற்றது யோக்செயார்

2014 ஆம் ஆண்டுக்கான டுவர் டி பிரான்ஸ் சைக்கிளோட்டப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகளை நடத்தும் வாய்ப்பினை யோக்செயார் பெற்றுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜூலை 05 ஆம், 06 ஆம் திகதிகள் போட்டிகள் யோக்செயாரில் இடம்பெறவுள்ளதுடன், மூன்றாம் கட்டம் தென்பகுதியில் இடம்பெற்று, லண்டனில் நிறைவடையவுள்ளன.

இந்தப் போட்டிகள் லண்டனின், கன்டேர்பெரியில் 2007 ஆம் ஆண்டு நடைபெற்றன. இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு புளோரன்ஸ் மற்றும் எடின்பேர்க் ஆகியன போட்டியிட்ட போதிலும், யோக்செயார் அதற்கான வாய்ப்பினை பெற்றுள்ளது. டுவர் டி பிரான்ஸ் போட்டிகள் நடைபெறும் வீதிகள் தொடர்பான தகவல்கள் ஜனவரி மாதம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# தானம் செய்வோம்!

- குமார் கணேசன் -



ஆரோக்கியம் என்றவுடன் நமக்கு உடல் ஆரோக்கியம் தான் நினைவுக்கு வருகிறது. மன ஆரோக்கியத்தை யாரும் அதிகம் கண்டு கொள்வதில்லை.

உடல் வலிக்கு நிறைய மருந்துகள் உண்டு. நிறைய மருத்துவர்களும் இருக்கிறார்கள். மன வலிக்கு மருத்துவர்கள் இருந்தாலும் அவர்களிடம் ஆலோசனை பெறுவதைக் கூடத் தப்பாகப் பார்க்கும் ஊர் நம்மூர்.

உடற்பயிற்சிகள் செய்யும் நாம் உள்ளத்துக்குப் பயிற்சி செய்ய மறக்கிறோம் அல்லது மறுக்கிறோம்.

சில உடற்பயிற்சிகள் உள்ளத்துக்கும் பயிற்சியாக அமைந்தாலும், யோகா, தியானம், இசை, நல்ல சொற்பொழிவு கேட்டல், நல்ல புத்தகங்களைப் படித்தல், இயற்கையோடு ஒன்றி வாழுதல் எனப் பல பயிற்சிகள் உள்ளத்துக்கு நல்லதாகும். உள்ளப் பயிற்சியும் உடல் நோயைக் குணப்படுத்தும்.

மனிதர்களுக்கு உண்டாகும் நோய்கள் பலவிதம். ஒவ்வொரு நோய்க்கும் பல காரணங்கள் உள்ளன. பிறக்கும் போதே சில குழந்தைகள் நோயோடு பிறப்பதையும் நாம் காண்கிறோம். பெற்றோரின் குணங்கள் மரபணு வழியால் குழந்தைகளுக்குச் சென்றடைகின்றன.

பெற்றோரின் சில பரம்பரை நோய்களும் குழந்தைகளைப் பாதிப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த மாதிரி சூழலில் பெற்றோர் இன்னும் கொஞ்சம் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பல வீடுகள் சேர்ந்த கூட்டுக் குடியிருப்பு அது. ஒரு குழந்தையின் பிறந்தநாள் விழாவுக்கு வந்த பெற்றோர்கள் அனைவரும் தம் குழந்தைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒருவர் தம் மகள் வகுப்பில் முதல் மாணவி என்றும், இன்னொருவர் தன் மகன் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெறுபவன் எனவும் பேசிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலரோ தம் குழந்தைகளுக்கு ஆங்கிலம் வரவில்லை என்றும் அல்லது கணக்கு மட்டும் தகராறு என்றும் கவலையோடு சொன்னார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு தாய், "நீங்கள் உங்கள் குழந்தைகளின் மேல் வைத்திருக்கும் அன்பும் எதிர்பார்ப்பும் நல்லதே. ஆனால், முதலில் அவர்கள் நல்ல உடல் மற்றும் மன நலத்துடன் இருப்பதைப் பெரிய பாக்கியமாகக் கருதுங்கள். அதுவே வரம். அழகு, படிப்பு, பேச்சு, விளையாட்டு எல்லாம் போனஸ்தான்" என்றார் சற்று கோபமாக.

அவரின் பேச்சைக் கேட்ட எல்லோரும் அவரையும் அவரின் குழந்தையும் பார்த்தார்கள்.

"ஆம், என் குழந்தைக்கு மதி இறுக்கம் என்னும் வியாதி இருக்கிறது. மற்ற குழந்தைகளைப் போல அவனும் பேசமாட்டானா, சாப்பிடமாட்டானா, விளையாடமாட்டானா என்பதே என் கவலை. முதல் பரிசு என்றோ அல்லது முதல் மதிப்பெண் என்றோ நான் அதிகம் ஆசைப்படவில்லை" என்றார்.

அவர் சொன்னது மிகவும் உண்மை. குறையோடு பிறப்பது குழந்தைகளின் தப்பில்லை. சொல்லப் போனால் பல நேரங்களில் அது பெற்றோர்களின் குறைதான். எனவே, நாம் அவர்களை அன்போடு வளர்க்க வேண்டும். மருத்துவம் வளர்ந்த இந்நாளில் எல்லா நோய்களுக்கும் ஒரு தீர்வு உண்டு. நோயில் பிறந்த குழந்தைகளைத் தன் வீட்டில் வைத்து மோசமாக நடத்துவதை விட, அன்பு . இல்லங்களில் அவர்களை விடுவது மேல் என்றே தோன்றுகிறது.

திருமணம் ஆகிப் பல ஆண்டுகள் குழந்தை பிறக்கவில்லை என்றால், குழந்தை இல்லையே என ஏங்குகின்றார்கள். பெண் குழந்தை பிறந்தால் ஆண் குழந்தை இல்லையே என்று கவலை.

பின் அது கறுப்பா, வெள்ளையா, அழகா, இல்லையா என்று கவலை. நன்றாகப் பேசுமா, நன்றாகப் படிக்குமா, படித்து நல்ல மதிப்பெண்கள் பெற்று டாக்டர் அல்லது என்ஜினீயர் ஆகி, நல்ல இடத்தில் வேலை கிடைத்து, பின் நல்ல இடத்தில் திருமணம் நடந்து, ஒரு வருடத்தில் ஒரு பேரக் குழந்தை பிறந்து, அவனுக்கும் ஒரு நல்ல பள்ளிக்கூடத்தில் இடம் கிடைத்து... என எத்தனை எதிர்பார்ப்புகள் கவலைகளோடு.

எதிர்பார்ப்புகளில் தப்பில்லை. ஆனால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வரை மகிழ்ச்சியாக இருக்க மாட்டேன் எனக் கவலைப்படுவதுதான் மகா தப்பு. அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்புகளும், தேவையில்லாத எதிர்பார்ப்புகளும் தப்பு.

"நோயைக் குணப்படுத்துவதை விட நோயைத் தடுப்பது மேல்" என்று அன்று சொன்னார்கள். "நோயைத் தடுப்பதே ஒரே வழி" என்பது இன்றைய அறிவுரை.

நாம் சுவாசிக்கும் காற்றும், குடிக்கும் நீரும், உண்ணும் உணவும் மிக முக்கியம். அவற்றின் மூலமாக உள்ளே செல்லும் நோய்க்கிருமிகள்தான் பெரும்பாலும் உடலில் நோயை உண்டு பண்ணுகின்றன.

எனவே சுத்தமாக இருந்தால் தான் சுகர்தாரமாக இருக்க முடியும். நம் உடல், உள்ளம், வீடு, நாடு, பூமி எல்லாவற்றையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

அறிவியல் வளரும் வேகத்தில் செயற்கை இரத்தம், செயற்கை உறுப்புகள் என எல்லாம். எளிதில் தயாரிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அதுவரை, மூன்று மாதத்துக்கு ஒரு முறை இரத்த தானம் செய்வோம்.

மண்ணுக்கோ, நெருப்புக்கோ இரையாகும் நம் உயிரற்ற உடலுக்கு மீண்டும் உயிர் கொடுப்போம். கண், இதயம், கல்லீரல், நுரையீரல், சிறு நீரகம், தோல் என நம் உறுப்புகளைத் தானம் செய்வோம்.

இறந்த பின்னும் இவ்வுலகில் இன்னொருவர் வழி வாழ்வோம்!

# அறியாத பயணம்!

வாகனங்கள் என்பது ஒரு மனிதனின் இன்றியமையாத தேவையாக உள்ளது. ஏதாவது



ஒரு வகையில் மனிதன் வாகனத்தைப் பயன்படுத்திக் கொண்டே இருக்கிறான். ஆனால் பயணத்தில் உள்ள பல்வேறு விஷயங்கள் யாருக்கும் தெரியாமலேயே உள்ளது.

வாகனங்களை ஓட்டத் தெரிந்த பலர், சாலைகளில் இடம் பெறுபவை குறித்து அறிந்திருப்பதில்லை.

பகலில் முகப்பு விளக்குகளை எரியவிட்டு எதிரே வரும் வாகனத்தை எச்சரித்தபடி முன்னேறுவது குற்றம்.

சாதாரண நேரங்களில் நான்கு புறங்களிலும் உள்ள எச்சரிக்கை விளக்கை எரிய விடுவது தவறு. அபாயகரமான சூழ்நிலையிலோ அல்லது வாகனம் பழுதாகி நிற்கும்போதோ, பழுதான வாகனத்தை பிற வாகனங்கள் இழுத்துச் செல்லும்போதோ தான் எரியவிட வேண்டும்.

சிக்னல்கள் அல்லது சாலையில் வாகனங்களை நிறுத்தி இருக்கும்போது, அனைத்து விளக்குகளையும் எரியவிடக் கூடாது.

சாலையின் நடுவில் கோடுகளை குறிப்பிட்ட இடைவெளியில் விட்டுவிட்டு போட்டிருந்தால், ஒரு வாகனத்தை நாம் இந்த இடத்தில் முந்திச் செல்லலாம் என்று பொருள். அதேசமயம் தொடர்ச்சியான நீண்ட கோடுகளாக போட்டிருந்தால் முந்தக் கூடாது என்று பொருள்.

சாலையின் நடுவில் தொடர்ச்சியாக இரட்டைக் கோடுகள் போட்டிருந்தால், அதை ஒரு தடுப்புச் சுவராக கருத வேண்டும்.

ஓட்டுநருக்கு 20.5 மீ (67 அடி) தொலைவில் இருந்து வரும் வாகனத்தின் பதிவு எண்ணை படிக்க முடிந்தால், கண்கள் நல்ல பார்வையுடன் உள்ளது என பொருள். எனவே, ஓட்டுநர்கள் ஆண்டுக்கு ஒருமுறை இரத்த அழுத்தம், நீரிழிவு, கண் பரிசோதனை செய்வது நல்லது.

கனரக வாகனங்களின் பின்புறம் சிவப்பு நிற முக்கோண வடிவச் சின்னம் உள்ளது. இது முற்றிலும் தவறு. மோட்டார் வாகன சட்டப்படி, அது ஒரு எச்சரிக்கை சின்னம். வீதியில் ஒரு வாகனம் பழுதாகி நின்றாலோ, அவசர நிலையிலோ அதை வாகனத்தின் பின்புறம், அதுவும் 15 அடி தள்ளிதான் வைக்க வேண்டும்.

நெடுஞ்சாலையில் எதிரே வரும் வாகனத்திற்கு வசதியாக முகப்பு விளக்குகளை 250 மீற்றருக்கு முன்பே "டிம்" செய்ய வேண்டும்.

வளைவுகளில் அதிவேகமாக ஓட்டிச் சென்றால் விபத்து நடக்கும். அதற்கு "இன் ஸ்லோ-அவுட் பாஸ்ட்" என்ற முறையில் செல்ல வேண்டும். அதாவது, மைய ஈர்ப்பு விசை, விலக்கு விசைகளின் அடிப்படையில், வளைவுகளில் நுழையும்போது மெதுவாகவும், பின் ஆக்ஸிலேட்டரை லேசாக அழுத்தியும் செல்ல வேண்டும். ஆனால் பலர் வேகமாகவே நுழைந்து பிரேக் அடித்து திரும்புகின்றனர். இதனால் வாகனம் கவிழ்ந்துவிடும்.

கார்களில் செல்வோர் சீற் பெல்ட் அணியும்போது சட்டைப் பையில் செல்போன், பேனா, சில்லறைக் காசுகள் வைத்திருப்பதை தவிர்க்க வேண்டும். பெண்கள் அதிக நகைகள் அணிந்திருக்கக் கூடாது. அசம்பாவிதம் நேரிட்டால் அந்த பொருட்களே பயணிக்கு எமனாக மாறிவிடும்.

மொத்தத்தில் விவேகமான வேகமே விபத்துக்களில் இருந்து நம்மை பாதுகாக்கும்.

# வெற்றிலை போடுபவரா நீங்கள்?



சமிபாட்டுக்கு வெற்றிலை நல்லது என்கிறார்கள். அதுதவிர நாம் சாப்பிடும் சாப்பாட்டினால் ஏதும் ஒவ்வாமை வந்தால் அதனை வெற்றிலை நீக்குமாம். வெற்றிலையோ அல்லது பாக்கோ எதுவானாலும் அதை மட்டும் தனியாக வாயில் போட்டு மெல்லக்கூடாது. வெற்றிலையை மட்டும் வாயில் போட்டு அப்படியே மென்றால் நாக்கின் நுண்ணிய நரம்புகளும், இரத்த ஓட்டமும் பாதிப்படையும். சரியாக பேச வராது. பாக்கை மட்டும் தனியே மென்றால் நெஞ்சுவலி வரும். சில சமயம் மாரடைப்பு ஏற்படலாம். தவிர ஈரல் பாதிப்புடன் சோகை வியாதியும் வரலாம்.

வெற்றிலையை இரண்டு மூன்றாக சேர்த்து வைத்துப் போடக்கூடாது. வெற்றிலையின் பின்புறத்தில் சின்னச்சின்ன பூச்சி, புழுக்கள் இருக்கலாம். வெற்றிலையை மொத்தமாக சேர்த்து மெல்லும்போது அந்த புழு, பூச்சிகளும் வயிற்றுக்குள்போகும். சிலபேரை இது உடனடியாக மயக்கத்தில்கூட தள்ளிவிடும். நடுநரம்பை ஒட்டித்தான் பூச்சிகள் இருக்கும். வெற்றிலையை கிழித்துப் போடுவது அதற்காகத்தான். அதனால் வெற்றிலையை ஒவ்வொன்றாக எடுத்து முன்னேயும் பின்னேயும் துடைத்து சுண்ணாம்பு தடவி நடு நரம்பைக் கிள்ளிப்போட்டுவிட்டு பாக்கோடு சேர்த்துப் போட்டுக்கொள்கிறார்கள் பெரியவர்கள்.

# அழகிய மிதிலை நகரினிலே!

- R.P. ராஜநாயஹம் -

ஹரிநாத் ராஜா!

பானுமதி நடித்த "அன்னை" படத்தில் அவருக்கு வளர்ப்பு மகன். தங்கை மகனை தத்து எடுத்து வளர்ப்பார். தங்கத் தட்டில் தான் சோறூட்டி பொத்தி பொத்தி வளர்ப்பார் படத்தில்.

சச்சு உடன் ஹரிநாத் ராஜாவுக்கு ஒரு அருமையான பாடல். அழகான காரில். "அழகிய மிதிலை நகரினிலே யாருக்கு ஜானகி காத்திருந்தாள் பழகிய ராமன் வரவை எண்ணி பாதையை அவள் பார்த்திருந்தாள்"






தெரிந்து புரிந்து தான் அவரை கவனிக்கிறேன் என்பதை உணர்ந்து என்னை பார்த்தார். அதற்குள் பஸ் வந்து விட்டது. சரியான கூட்டம் பஸ் நிறைய. ஏறவும் பலரும் பெரும் முயற்சி எடுக்க ஆரம்பித்தனர்.

இவர் பின்புற வாசல் கம்பியை பிடித்து ஏற பகீரத பிரயத்தனம் செய்கிறார். நழுவி மீண்டும் முயல்கிறார். கம்பியை பிடித்த பிடியை விடவில்லை. கண்டக்டர் "இடமில்லைப்பா. அடுத்த வண்டியில் வாப்பா" என்று கூப்பாடு போடுகிறார். கூட்டம் முண்டிக்கொண்டு இருக்கிறது. பஸ் கிளம்ப விசில் கொடுத்த கண்டக்டர் கம்பியை பிடித்திருக்கிற ராஜாவின் கையில் அடித்து "கைய எடுப்பா. கைய எடுக்க மாட்டே"

காத்திருந்தாள் பழகிய ராமன் வரவை எண்ணி பாதையை அவள் பார்த்திருந்தாள்."

அந்த பாடல் அந்த கணத்தில் அங்கிருந்த கடையொன்றில் நிஜமாக ஒலித்தது!

அவர் அவமானத்துடன் என்னை ஒரு பார்வை பார்த்தார்.

உறுத்தும் உண்மையை காண சகியாமல் நான் நடக்க ஆரம்பித்தேன்.

அவர் அடுத்த பஸ்ஸுக்காக காத்துக்கொண்டிருந்தார்.

ரேடியோ பாடல் சரணம் பாடிக்கொண்டிருந்தது "காவிய கண்ணகி இதயத்திலே கனிந்தவர் யார் இளம் பருவத்திலே"

அவர் அந்த பாடலை கேட்டுக்கொண்டே தான் அடுத்த டவுன் பஸ்ஸை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.


சுமைதாங்கியில் எல்.விஜயலக்ஷ்மியுடன் "ஒ மாம்பழத்து வண்டு"

சரஸ்வதி சபதம் படத்தில் "நாட்டிய பேரொளி" பத்மினிக்கு ஜோடி. பரமசிவனாக.

எங்கிருந்தோ வந்தாள் படத்தில் வில்லன். சிவாஜியை குடித்து விட்டு ஹரிநாத் ராஜா நிஜமாகவே நடிக்கும்போது கன்னத்தில் அறைந்து விட்டார். பாலாஜி இவரை பெண்டு கழட்டி விட்டார்.

பாண்டி பஜார் ரோகினி இண்டெர்நேஷனல் லாட்ஜில் வைத்து ஒரு நாள் சுப்ரமணிய அய்யர் என்பவர் இவர் நடந்து போகும்போது காட்டி "இவர் யார் தெரிகிறதோ? ஹரிநாத் ராஜா." என சுட்டினார். ஆர்வமாக பார்த்தேன். வசதி இல்லை இப்போது அசதியில் இருப்பது பார்த்தவுடன் தெரிந்தது. குடித்தே வீணாக போய் விட்டார். குழந்தைகளும் இவருக்கு அதிகம் என அறிய வந்தேன்.

ஹரிநாத் ராஜா போன சிறிது நேரத்தில் நான் கிளம்பினேன். பஸ் ஸ்டாப். ராஜா அங்கே பஸ்ஸுக்காக நின்று கொண்டிருந்தார். நான் அவரை மீண்டும் பார்த்தேன். தான் இன்னார் என்று எனக்கு



சத்தம் போடுகிறார். ராஜாவின் பிடி தளர்ந்து தடுமாறி கடைசி படியிலிருந்த ஒற்றை காலை கீழிறக்கி தள்ளாடி தவித்து நிற்கமுடியாமல் இறங்கி நிற்கிறார். நிலைப்பட சற்று நேரமாகிறது.

"அழகிய மிதிலை நகரினிலே யாருக்கு ஜானகி

## உலகிலேயே மிகப் பெரியது

- மிகப் பெரிய எரிமலை – லஸ்கார் [சிலி]
- மிகப் பெரிய நாடு – கனடா
- மிகப் பெரிய கண்டம் – ஆசியா
- மிகப் பெரிய பாலைவனம் – சகாரா
- மிகப் பெரிய ஆறு – நைல்
- மிகப் பெரிய தீவு – கிரீன்லாந்து
- மிகப் பெரிய பாலம் – லடாக் பாலம் [இமயமலை]
- மிகப் பெரிய பறவை – நெருப்புக் கோழி
- மிகப் பெரிய கடல் பறவை – ஆல்பட்ராஸ்

# உலகம் தவறான பாதையிலிருந்து நல்வழிக்கு.....

இன்று உலகத் தலைவர்களை எடுத்துக் கொண்டால் சாதாரண மக்களின் சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவது மனித உரிமை ஜனநாயகம் பற்றி அக்கறை கொண்டவர்கள் அருந்தலாகவே காணப்படுகிறார்கள்.

இந்த புவிக்கோளும் மக்களும் பாதுகாக்கப்படவேண்டும். நிச்சயமற்ற நிலை பூவுலகின் மரணம் நிகழ்ந்து கொண்டிருக்கிறதா என்ற கேள்வி திரும்பதிரும்ப எழுகிறது. எனவே அற உணர்வுள்ளவர்களின் பங்களிப்பு அதீதமாகத் தேவைப்படுகிறது.

இந்தியாவில் அப்துல் கலாம், கிருஸ்ணையர், மார்க்கண்டேய

பேரழிவுப்பாதையிலிருந்து உலகை மீட்கப் பாடுபடவேண்டும். காந்தியடிகளின் கருத்துக்களும் போராட்ட வழிமுறைகளும் உலகளாவிய அளவில் செல்வாக்கு பெற்றது அது இந்தியாவில் மாத்திரமல்ல தென்னாபிரிக்கா வட அமெரிக்கா வரை அது வியாபித்தது.

சமத்துவமற்ற உலக ஒழுங்கு மாற வேண:டும். மாக்ஸ், ஏங்கல்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பணி லெனின், றோசாலக்சம்பேர்க், ட்ரொட்ஸ்கி,

பிரமாண்டமான அளவில் உயிரழிவுகள் நிகழ்ந்தாலும் பேரழிவுகளுக்கெதிரான சக்திகளும் தார்மீக பலம் உள்ளவையாக இருந்தன. மானிடத்தின் நல்வாழ்வு பற்றி அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். இன்று அற உணர்வுகள் அருகி விட்டன.

சுயநலமும் பெருவாரியான மக்களுக்கு அனர்த்தம் விளைவிக்கும் முறைகளே கடைப்பிடிக்கப்படுகின்றன. பங்கு மார்க்கட் பல்தேசிய கம்பனிகளின் வளர்ச்சி நாட்டின்


என்பது அப்பாவி மக்களின் உயிரைக் குடிக்கும் பயங்கரவாதமாக இருக்கமுடியாது.

மத இன அடிப்படைவாதங்களுக்கு எதிர்கால உலகில் இடமில்லை என்றாக வேண்டும். பூமியைப்பற்றிய பிரக்ஞை வேண்டும். உலகின் நல்ல சக்திகள் இணைய வேண்டும்.

தீய சக்திகளின கட்டற்ற பெருக்கத்திற்கெதிராக இது நிகழவேண்டும். இங்கு தனிமனிதர்களின் பெயர்கள் மாதிரி



மார்க்கண்டேய கட்ஜு




நோம் சோம்ஸ்கி



வங்காரி மாத்தா



மேரி றொபின்சன்



அருந்ததி ராய்

கட்ஜு, அருந்ததி ராய், அமர்த்தியா சென், தென்னாபிரிக்காவில் டெஸ்மன் டுட்டு, அயர்லாந்தின் மேரி றொபின்சன், ஆபிரிக்காவின வங்கரி மாத்தா, பிடல் கஸ்டரோ, நெல்சன் மண்டெலா, அமெரிக்காவின் நோம் சோம்ஸ்கி இன்னும் இந்த வரிசையில் உலகளாவிய அளவில் பல சிறந்த மனிதர்களின் ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசியப்படுகிறது.

மக்கள் நாடு உலகம் பற்றிய அக்கறை உள்ளவர்கள் உலக இராணுவமயமக்கம்

ஸ்டாலின், மாவோ, லுமும்பா, அலன்டே இன்றைய சாவேசு வரை செயற்பட்டிருக்கிறார்கள். செயற்படுகிறார்கள்.

ஜவஹர்லால் நேரு, ஹோசிமின், சேகுவேரா போன்ற ஆளுமைகள் அறவழி உலகிற்காக பாடுபட்டார்கள். டால்ஸ்டாய், காந்தியடிகள், தாகூர், கான் அப்துல் கபார்கான், ஐன்ஸ்ரீன் இவர்களுக்கிடையே உறவுகள் இருந்தன.

பாசிசம் காலனியாதிக்கத்திற்கெதிரான விழிப்புணர்வு காணப்பட்டது.

வளர்ச்சி உலகின் வளர்ச்சி என்று சொல்லப்படும் கலிகாலத்தில் நாம் வாழ்கிறோம்.

இயற்கையை சூறையாடல் உலகம் முழுவதும் ஒருவிதமான பிரக்ஞையுமற்று நிகழ்கின்றன. இராணுவவாதம் உடல் மீதியின்றி அழித்தல் என்பன மிகவும் துணிச்சலாக நடைபெறுகின்றன. இதுவும் இயல்பானதே யதார்த்தமானதே என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.


அதிகாரத்திற்கெதிரான போராட்டம்

இருந்தாலும் அவர்கள் உலக மக்களை ஆகர்சிக்க கூடியவர்கள். விரிந்து பரந்த பார்வை உள்ளவர்கள்.

இவர்களைப் போன்றவர்கள் ஒருங்கிணைந்து உலகின் எதிர்காலம் பற்றி பேச வேண்டும். இதற்கான முன்னெடுப்புக்கள் அவசியமானது. உலகளாவிய அளவில் தொடர்பு கொண்ட உலக மானிட சமூக அக்கறை கொண்டவர்கள் இதனை மேற்கொள்ளலாம்.

- சுகு ஸ்ரீதரன் -

# அதிவேகத்தில் இணையதள சேவை




கற்பனைக்கு எட்டாத வீடியோ மற்றும படங்கள் பிரவுஸ் ஆகக்கூடிய பைபர் என்ற இணைய தள சேவையை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. நொடிக்கு 1 ஜிகாபைட் வேகத்தில் இணைய தளங்களை பார்க்க முடியும். அமெரிக்காவின் மிசவுரி மாநிலம் கன்சாஸ் நகரில் இந்த சேவை முதல்கட்டமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இப்போது பயன்படுத்தப்படும் இன்டர்நெட் பிராட்பேண்ட் வேகத்தைவிட இது 100 மடங்கு அதிக வேகத்தில் செயற்படும். அதாவது, நியூயார்க்கில் இருந்து சான் பிரான்சிஸ்கோ நகருக்கு அரை மணி நேரத்தில் காரை ஓட்டும் வேகம் இது.மூன்று கட்டண திட்டங்களில் இந்த சேவையை அளிக்கும் கூகுள், இன்டர்நெட் மட்டுமின்றி கேபிள் சேனல்களை எச்டி தொழில்நுட்பத்தில் பார்க்கும் வசதியும் அளிக்கிறது. இந்த இணைப்பு பெறுபவர்களின் கம்ப்யூட்டர் திரையில் இணைய தளங்களின் வீடியோவை கிளிக் செய்தால் கண் இமைக்கும் நேரத்தில் வீடியோ அப்லோடு ஆகிவிடும். பைல்களையும் இதே வேகத்தில் பரிமாறிக் கொள்ள முடியும்.




# விண்டோஸ் 7 ரெக்கவரி டிஸ்க் - பூட் ஆகாத கணினியை மீட்க





கணனி பயன்படுத்தும் பலருக்கு ஏற்படும் ஒரு பிரச்சினை விண்டோஸ் சில நேரங்களில் ஆன் செய்தவுடன் பூட் ஆகாமல் செயல் இழப்பது தான். Windows cannot start, File missing or corrupt - ஏதாவது ஒரு கோப்பு காணவில்லை அல்லது அழிந்து விட்டது என்று சொல்லிவிட்டு படுத்துக் கொள்ளும். விண்டோஸ் நிறுவப்பட்டிருக்கும் சி டிரைவில் நம்முடைய முக்கியமான கோப்புகள் ஏதாவது இருந்தால் அவ்வளவு தான். எப்படி மீட்பது என்ற தலைவலி வந்துவிடும். வைரஸ் தாக்குதல்கள் அல்லது கணனியின் முக்கியமான கோப்புகளை தெரியாமல் அழித்துவிடும் போது இந்த மாதிரி பிழைச்செய்தியை கொடுக்கும். விண்டோஸ் எக்ஸ்பி இயங்குதளம் எனின் இந்த மாதிரி தொலைந்த/அழிந்த கோப்புகளை கண்டுபிடித்து மீட்பது கொஞ்சம் சிரமமான வேலை.

ஆனால் விண்டோஸ் 7 இயங்குதளம் பயன்படுத்துவோருக்கு இந்த வேலையை NeoSmart நிறுவனத்தின் Windows 7 Recovery disk மென்பொருள் மூலம் எளிமையாக்கலாம். இதன் மூலம் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்ய முடியும்.

1. Access system recovery option,
2. automated system repair,
3. complete PC backup,
4. command line prompt and
5. fixes common issues

இந்த டிஸ்க் மூலம் நீங்கள் பூட் ஆகாத கணனியில் போட்டு Startup Repair என்று கொடுத்தால் போதும். சில நிமிடங்களில் விண்டோஸ் இயங்குதளத்தில் என் னென்ன கோப்புகள் இல்லையோ அல்லது பாதிக்கப்பட்ட கோப்புகளை சரிசெய்து உங்கள் கணனியை பழைய நல்ல நிலை மைக்கு கொண்டுவந்துவிடும். மறுபடியும் இயங்குதளத்தை நிறுவும் கடினமான வேலையே இல்லை.

மேலும் கணனியில் உள்ள கோப்புகளை back up செய்வது, குறிப்பிட்ட ரீஸ்டோர் பாயிண்டிலிருந்து (System Restore point) கணனியை மீட்பது, பொதுவாக ஏற்படும் பிழைகளை நிவர்த்தி செய்வது போன்ற அவசியமான வசதிகளைத் தந்துள்ளது. மேலும் Command prompt மூலம் நீங்களே சரிசெய்யும் வசதியும் உள்ளது.




பூட் ஆகாத கணனியில் இந்த டிஸ்கைப் போட்டதும் F8 பட்டனை அழுத்தினால் போதும். இதன் வசதிகள் எல்லாம் மெனுவாக காட்டப்படும். கணிப்பொறி வல்லுநரை கூப்பிட வேண்டிய அவசியமின்றி நீங்களே சுலபமாக செய்து விட முடியும்.

# உங்கள் கணனிச் செயற்பாட்டை விரைவாக்க வேண்டுமா?



**மிக** மெதுவாகச் செயற்படும் கணனி உங்களை வெறுப்பேற்றுகிறதா? கீழ்கண்டவற்றைப் பின்பற்றுவதன் மூலமாக உங்கள் கணனியை விரைவாகச் செயற்பட வைக்க முடியும். 1. உங்கள் கணனியைச் சுத்தம் செய்யுங்கள்: உங்கள் கணனியின் டெஸ்க்டாப் அடைசலாக இல்லாமல் இருந்தாலே உங்கள் கணனி விரைவாகச் செயற்படத் தொடங்கும். அதேபோல், உங்கள் சி வட்டியக்கி (ட்ரைவ்) முழுக்க கோப்புகளை அடைத்து வைக்காமல் நிறைய வெற்றிடம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும். குறைந்தது 25 சதவீத இடமாவது காலியாக இருந்தால்தான் கணனியின் வேகம் அதிகரிக்கும்.

அ. இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யு முன் உண்மையிலேயே அது தேவையான கோப்பு தானா என்று பார்த்துக்கொண்டு பதிவிறக்கம் செய்யுங்கள். அக்கோப்பின் பயன்பாடு முடிந்தபின் அதை அழித்துவிடுங்கள்.

ஆ. உங்களுக்குப் பயன்படாத மென்பொருட்களைத் தேவையில்லாமல் சேமித்து வைக்கவேண்டாம்.

இ. புகைப்படங்கள், பவர்பாயிண்ட்கள், திரைப் படங்கள், பாடல்கள் இவற்றைத் தனியாக "சி டி" "டிவிடி"க்களில் பதிந்து வைத்துக்கொண்டால், "ஹார்ட் டிஸ்க்" இடமும் மிச்சமாகும். உங்கள் கணனி பாதிப்படைந்தாலும், இவை பத்திரமாகவே இருக்கவும் உதவும்.

ஈ. "ஸ்டார்ட்" ஐச் சொடுக்கவும். "ரன்" என்பதைத் தேர்ந்தெடுத்து அதில் "%Temp%" என்று தட்டச்சு செய்து "Enter" ஐத் தட்டவும். தற்காலிகமாகத் தேவைப்பட்ட, சேமிக்கப்பட்ட கோப்புகள் உள்ள Folder திறக்கப்படும். அதில் உள்ள கோப்புகளை எல்லாம் முழுமையாக அழித்துவிடவும்.

உ. தேவைப்படாத கோப்புகளை அழிக்கையில் 'Shift Key'ஐப் பிடித்துக்கொண்டு அழிப்பதன் மூலம், Recyecle Bin இல் கோப்புகள் சேராமல் நேராக அழிக்கப்படும். அடிக்கடி உங்கள் Recycle BinIஐக் காலி செய்வது அவசியம். ஏனெனில் அழிக கப்பட்ட கோப்புகள் Recycle Bin இல் இருக்கு மானால் உங்கள் சி டிரை வின் இடத்தை அது எடுத்துக்கொள்ளுவதாகவே ஆகிறது.

2. உங்கள் கணனித் திரையில் 'WallPaper' பயன்படுத்தாதீர்கள். அது கணனிச் செயல்பாட்டின் வேகத்தைக் குறைக்கக் கூடியது.

3. கூடியவரை ஒரே நேரத்தில் பல கோப்புகளைத் திறப்பது, பல மென்பொருட்களைப் பயன்படுத்துவது வேகத்தைக் குறைக்கும். தேவையென்றால் ஒழிய, பல கோப்பு களைத் திறந்து வைக்கவேண்டாம். அப்படி ஒரே நேரத்தில் பல கோப்புகளைத் திறக்க நேர்ந்தால், அப்பொழுது பயன்படுத்தும் கோப்பைத்தவிர மற்றவற்றைச் சிறிதாக்கி (Minimize) வைக்கவும்.

4. கணனியில் பாடல் கேட்டுக்கொண்டே வேலை செய்வது உங்களுக்குச் சுகம்தான். ஆனால் உங்கள் 'RAM' இன் சக்தி கண்டிப்பாகக் குறைந்துவிடும். முடிந்தால் இதைத் தவிர்க்கலாம்.

5. உங்கள் கணனியில் "விண்டோஸ்" ஒவ்வொரு முறை துவக்கப்படுகையிலும், அத்தனை எழுத்துருக்களையும் (Fonts) லோட் செய்கிறது. இதனாலும், தாமதம் ஏற்படலாம். இதைத் தவிர்க்க, நீங்கள் பயன்படுத்தாத எழுத்துருக்களை கணனியில் இருந்து நீக்கி விடலாம். அதற்கு, உங்கள் C:\Windows சென்று Fonts /போல்டரைத்திறந்து, தேவைப்படாத எழுத்துருக்களை அழித்துவிடுங்கள். (v.fh. Windings). உங்கள் கணனி பயன்படுத்தும் எழுத்துருக்கள் சிவப்பு நிறத்தில் A என்ற எழுதப்பட்டிருக்கும். அவற்றை அழித்து விடக்கூடாது. கவனம்.

6. பொதுவாக கணனியில் கோப்புகள் பதியப்படும்பொழுது துண்டாக்கப் பட்டுப் பதியப்பட்டிருக்கலாம் (Fragmentation). இதன் காரணமாக நீங்கள் ஒவ்வொரு முறை அந்தக் கோப்பைத் திறக்கும் பொழுதும் கணனி அந்த முழுக் கோப்பின் துண்டுகளைத்தேடித் தேடி இணைத்துத் தருகிறது. இதனால் நீங்கள் கோப்பைத் திறக்கத் தாமதமாகிறது. இப்பிரச்சினை, நீங்கள் குறைந்தது மாதம் ஒரு முறையாவது உங்கள் கணனியை Defragmentation செய்வதன் மூலம் தீர்ந்துவிடும். எப்பொழுதெல்லாம் உங்கள் கணனியில் ஏராளமான கோப்புகள் குவிந்துவிடுகின்றனவோ, உங்கள் கணனி வட்டியக்கியில் (டிஸ்க் ட்ரைவ்) உள்ள காலியிடம் 15 சதவீதத்திற்கு கீழ் வந்துவிடுகையிலோ, நீங்கள் உங்கள் கணனியில் புதிய நிரல்கள் அல்லது "விண்டோஸ்" மென்பொருளின் சமீப வெளியீடு எதையாவது நிறுவுகையிலோ நீங்கள் Defragmentation செய்வது மிகவும் அவசியம்.

7. CCleaner என்ற நிரலானது உங்கள் கணனியில் உள்ள தற்காலிகக்கோப்புகள், தேவையற்ற கோப்புகளை நீக்கவும், உங்கள் 'Registry' யில் உள்ள பிரச்சினைகளைச் சரிசெய்யவும் உதவுகிறது.

8. XP Boot Logo ஒவ்வொரு முறையும் உங்கள் கணனியை இயக்குகையில் நிறுவப்படாதவாறு முடக்கம் செய்யுங்கள்.

9. தேவையற்ற பயன்படாத Portfis முடக்கிவையுங்கள்

10. உங்கள் Hard Disk ஐ, பிரித்து "சி" "டி", "இ" எனத்தனித்தனியாக வைப்பது உங்கள் கணனியில் செயற்பாடு வேகமடைய உதவும்.

11. அடிக்கடி உங்கள் கணனியின் தட்டச்சுப் பலகை, கணனி எலி, கணனியில் உள்ள விசிறி முதலியவற்றைச் சுத்தம் செய்யுங்கள்.

12. உங்கள் கணனியில் நச்சுநிரல்களை கண்டறிவதற்கான/அழிப்பதற்கான நிரல்களை அடிக்கடி பயன்படுத்துங்கள். பல நேரங்களில் நச்சு நிரல்கள், கணனியில் செயற்படும் திறனைக் குறைக்கின்றன.

13. சமீபத்தில் பார்க்கப்பட்ட கோப்புகள் என்ற பயன்பாட்டை நீங்கள் உபயோகப்படுத்துவதில்லை எனில், அதை நிரந்தரமாக முடக்கி வைக்கலாம். இது உங்கள் கணனியின் வேகத்தைக் குறைக்கும் ஒரு செயற்பாடு. அதை முடக்குவதன்மூலம் உங்கள் கணனியின் வேகம் அதிகரிக்கிறது.

14. உங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் வேறு இடத்தில் சேமித்தபின் உங்கள் கணனியை 'Reformat' செய்யுங்கள். உங்கள் கணனியின் வேகத்தை அதிகப்படுத்தக் கூடிய எளிய வழி இது.

15. இணையத்தில் தேவையற்ற விளம்பரங்கள் வந்து உங்கள் நேரத்தை வீணடிப்பதைத் தவிர்க்க 'AdBlocker' பொருத்துங்கள்.

16. இது எல்லாவற்றையும் விட மிகவும் எளிய வழி......ஒரு புதிய நவீனமான கணனியை வாங்கி விடுங்கள்.

# நகரசபை உறுப்பினர்கள் சுயநலமாக இராது மக்கள் நலனிலும் அக்கறை காட்டவேண்டும்

## வல்வெட்டித்துறை நகர சபை தலைவர்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் பல வருடங்களாக இயங்கிய மதுபானசாலை மேல் நீதி மன்றத் தீர்ப்பின் மூலம் கடந்த ஜுலை மாதம் முதல் மூடப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் வேறு ஒரு இடத்திலாவது திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று நகர சபை உறுப்பினர் சு.சே. குலநாயகம் அண்மையில் நகரசபை தவிசாளரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். ஒரு நகர சபை என்றால் அங்கு மதுபானசாலை ஒன்றும் இருக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறிய உறுப்பினர், உழைத்துக் களைத்தவர்கள் ஓய்வாகவும்,மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு இவை போன்ற மதுபான சாலைகள் ஒரு நகர சபை எல்லைக்குள் இருக்கவேண்டும் என்று அவர் தனது கோரிக்கை மூலம் தெரிவித்தார். இதற்கு நகரசபை தவிசாளர் நடராஜா ஆனந்தராஜா தெரிவிக்கையில்,

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக வல்வெட்டித்துறையில் இயங்கி வந்த மதுபான சாலை பல்வேறு கலாசார சீரழிவுக்ளுக்கும்,இளைஞர்களைத் தவறான வழிக்கும் இட்டுச் செல்வதற்குக் காரணமாக இருந்தது. சுமார் 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் எழுத்து மூலம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலும் சபையின் தீர்மானத்தின் அடிப்படையிலுமே இதனை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன பலத்த எதிர்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக மூடப்பட்ட மதுபான சாலையை மீண்டும் திறப்பதற்கு ஊக்குவிக்க வேண்டாம் என்று குலநாயகத்திடம் தலைவர் கேட்டுக் கொண்டார்.

வல்வெட்டித்துறை நகர மத்தியில் பாடசாலை,குடியிருப்புக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு அண்மையில் இயங்கிய மதுபான சாலை மூடப்பட்டதால் ஒரு சில மதுப்பிரியர்கள் எதிர்ப்புக் காட்டிய போதும், பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் குறிப்பாகப் பெண்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து வருவதாகவும் நகர சபை உறுப்பினர்கள் வெறுமனே உறுப்பினராகவும் பார்வையாளராகவும் இருக்காது,நகர அபிவிருத்தியிலும் பொது மக்களின் சமூக,பண்பாட்டு விழுமியங்களிலும் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும் என்றும் அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டார்.

# தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு

(பருத்தித்துறை)

தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி பருத்தித்துறை நகர சபையால் நடாத்தப்பட்ட முன்பள்ளிகள், சனசமூக நிலையங்களுக்கான பரிசளிப்பு விழா பருத்தித்துறை நகரசபை பொது நூலக மண்டபத்தில் நகரசபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சி பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். இங்கு போட்டிகளில் வெற்றியீட்டிய முன்பள்ளிச்சிறுவர்களுக்கும், முன்பள்ளி ஆசிரியைகளுக்கும், சனசமூக நிலையங்களின் போட்டிகளில் வெற்றியீட்டிய சனசமூக நிலையங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இங்கு நூல்கள் , முத்திரைகள் கண்காட்சியும் இடம்பெற்றது. சபாஇரவீந்திரன் அறக்கட்டளை நிதியத்திலிருந்து பொது நூலகத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களும் அறக்கட்டளை நிதியப்பணிப்பாளர் திருமதி கருணா இரவீந்திரனால் நூலகரிடம் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரஎல்லைக்குள் உள்ள சனசமூக நிலையங்களின் போட்டியிலே தும்பளை மேற்கு சனசமூக நிலையம் முதலாம் இடத்தையும் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற சனசமூக நிலையம் இரணடாம் இடத்தையும் பருத்தித்துறை சென்தோமஸ் சனசமூக நிலையம் மூன்றாம் இடத்தையும் பெறறுப் பாராட்டுப் பெற்றுள்ளன.

இவ்விழாவிலே வடமராட்சி வடக்கு பிரதேச செயலக தலைமைக்காரியாலய கிராம சேவை உத்தியோகத்தர் எஸ். பாரதி, பருத்தித்துறை நகர சபை பொது நூலக ஆலோசனைச் சபை உறுப்பினர்களான எஸ். குணசீலன், ஆர்.ரி. குலசிங்கம், நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், வரியிறுப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (01)

# விரதங்களுள் சக்தி வாய்ந்த வைகுண்ட ஏகாதசி



ஏகதாசி விரதமானது எல்லா விரதங்களுள் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒன்றையும் உண்ணாமலிருப்பதே உபவாசம், அன்னம், பால் தீர்த்தம் இவற்றில் ஒன்றையாவது உட்கொண்டால் அது விரதமாகாது.

புராண காலத்தில் மாபெரும் மன்னனானருக்கு மாங்கதன் அனைவரும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென ஆணையிட்டான். விரதம் அனுஷ்டித்த அனைவரும் பூரண ஆரோககியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்தனர். இதனால் யமனுக்கு வேலை குறைந்து விட்டது. இதற்காக தேவர்கள் மோகினியை அனுப்பினார்கள். காட்டுக்கு வேட்டைக்கு சென்ற ருக்கு மாங்கதன் அவள் மீது மோகம் கொண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான்.

ஏகாதசி தினத்தில் அதிகாலை எழுந்த மன்னன் மோகினியை ஸ்நானம் செய்து பூஜை அறைக்கு வருமாறு உபவாசமிருந்து பகவத் கதாசி வரணம் "கேட்கலாம் எனக் கூறினான். இவையெல்லாம் தேவையில்லாததொன்று" என மோகினி கூறினாள். அப்பொழுது மன்னனுக்கு தான் செய்த தவறு தெரிந்தது. தன்சொல்லை மீறினால் அருமை மைந்தன் தன் மாங்கதன் உயிருக்கு ஆபத்து வேண்டியிருக்கும் என்றாள். மோகினி வார்த்தையால் சினமுற்ற மன்னன் தன் மைந்தனை வெட்டி உனக்கு பலியாக்கி விட்டு ஏகாதசி விரத பங்கு இல்லாமல் செய்கிறேன் என்று கூறி மன்னன் வாளை வீசவே அது தர்மாங்கதன் கழுத்தில் பூமாலையாக வீழ்ந்தது. அந்தத் தருணத்தில் மன்னனாகிய தங்களது மன உறுதியைப் பரீட்சிக்கவே தான் மோகினி வடிவாக வந்ததாகக் கூறி தர்மதேவதை மறைந்தாள்.

ஏகாதாசியில் உபவாசமிருக்காதவர்களுக்கு பாரணை பலன் தராது. துவாதசி எத்தனை நாளஇருக்கின்றீர்களோ அதில் எட்டில் ஒரு பாகத்திற்கு ஹரிவாஸம் என்று பெயர். அந்த சமயம் பூஜை முடிந்து உண்பது பகவானுக்கு அன்னமிடுவதாகும்.

பகல் தூக்கம், எண்ணை ஸ்நானம், ஸ்திரி போகம், ஏகாதாசி விரத்தின் புனிதத் தன்மையை அகற்றி விடும்.

மகா விஷ்ணுக்கு பிரியாமான ஏகாதாசி நோன்பை இந்துக்கள் முக்கிய நோன்பாக அனுஷ்டிப்பது வழமை. வளர்பிறையில் ஒன்றும் தேய்பிறையில் ஒன்றும் மாதம் இருமுறை உபவாசமிருப்பது உடல் நலத்திற்கு நன்மை பயப்பதாக அமையும். மார்கழி மாதங்களில் சிறந்த மார்கழித் திங்களில் வரும் வளர்பிறை ஏகாதசி இறையன்பிற்கு முக்கியமானதாக அமையும்.

> கடந்த 16.12.2012 இல் ஆரம்பமாகி 24.12.2012 திங்கள் விரத ப,ர்த்தி தினத்தில் அதிகாலை 4.00 மணி தொடக்கம் விஷ்ணு ஆலயங்களில் வைகுண்ட ஏகாதசி சொர்க்க வாசல் சிறப்பாக கொண்டாடப்படும்.

விஷ்ணு ஆலயங்களில் வைகுண்ட ஏகாதாசியன்று திறக்கப்படும் வைகுண்ட வாசல் வழியாக திருமாலைத் தரிசனம் செய்தால் பிறப்பு, இறப்புகளிலிருந்து வீடுபட்டு விடு பேற்றை எய்த முடியும். என்பது நம்பிக்கை. ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களான பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயம், வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் ஆலயம் யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம் ஆகியவற்றில் வைகுண்ட ஏகாதாசி சுவர்க்கவாசல் திறப்பு என்பன நடைபெற்று வருகின்றன.

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

# பதிவிருக்கப் பெட்டகம்

கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ – புயல் சுமந்து
விற்குவளை பவளமலர்
மதி பூத்த விரைக் கொழுயோ
**– திருத்தொண்டர் புராணம்**

உனக்கு
எழுதுகிற போதே
இரண்டொரு
சொல்லை
தப்பிதமாய்
எழுதிவிடுகிறேன்
பிழைகள் பற்றியாவது
பேசுவாயில்லையா?
**– யுகபாரதி**

மேல் இமைகளில்
நீ இருக்கிறாய்
கீழ் இமைகளில்
நான் இருக்கிறேன்
இந்தக் கண்கள் கொஞ்சம்
தூங்கிவிட்டாலென்ன
**– அறிவுமதி**

நினைக்க வேண்டாம்
என்று நினைக்க நினைக்க
எண்ணமெல்லாம்
நீயானாய்.
**– இரா.ஆனந்தி**

கிரிக்....ரிக்....கிரீக்....
அசைந்தபடி ஊஞ்சல்....
ஜல் ஜல் ஜல் ஜல்....
மெள்ளத் தேயும் கொலுசொலி
மிதந்தபடி குளித்த வாசம்....
ஊஞ்சலின் மேல்
பாதி தொடுத்த பவளமல்லி....
ஓ! என்னைக் கண்டதும்தான
விசுக்கென நாணி
எழுந்து போயிருக்கிறாள்.
மீதமுள்ள பூக்களில்
புன்னகையுடன் அவள்முகம்!
**– சி.மணிவண்ணன்**

நமது இன்பத்து ஏகாந்த இரவின் இறுதியில்
பிறைவெளுத்த பின்மாலையில்
இருள்வெள்ளம் வடிந்த வைகறையில்
ஒவியமூட்டும் உன் ஒளிக்கரங்களை விட்டு
நான் பிரிவினை கொள்ளும் வேளையில்
என் கண்களைக் கலக்குவதென்ன
– காதலல்லாமல்?
அந்தக் கனவழியும் பொழுதில்
உன் வாயின் வார்த்தை வனப்புத்தானென்ன
– கவிதையல்லாமல்? **– கு.ப.ரா.**

நதியினும் குளத்தும் பூவா
நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லி பூப்ப
நோக்கிய மழலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு
வீழ்ந்தன அலைக்கப் போகா
புதியன கண்டபோழ்து
விடுவரோ புதுமை பார்ப்பார்.
**– கம்பன்**

போன வருஷச்சாரலுக்கு
குற்றாலம் போய்
கைப்பேனா மறந்து
கால்செருப்பு தொலைந்து
வரும்வழியில்
கண்டெடுத்த
கல்வெள்ளிக் கொலுசு ஒன்னு
கற்பனையில் வரைந்த
பொற்பாத சித்திரத்தை
கலைக்க முடியலியே இன்னும்.
**– விக்கிரமாதித்யன்**

கொய்யுமலர் வண்டெழுந்து
கோகனப் பூவெனச் செங்
கைம்மலரைச் சுற்ற...
**– கூளப்பநாயக்கன் காதல்**

என் காதலில்
பெருமைப்பட ஒன்றுமில்லை
சுவாசிப்பதைப் பற்றிச்
சிலாகித்துச் சொல்ல
என்ன இருக்கிறது
**– கனிமொழி**

பொன்வண்டொன்று மலரென்று
முகத்தோடு மோத –நான்
வளைகொண்ட ல்கையாலே
மெதுவாக மூட
**– கண்ணதாசன்**

யாருடைய இதயத்தில்
உயிரைவிட
இனிமையானவனாக
நான்
வசித்துக் கொண்டிருந்தேனோ
அவளுடைய
வாசற்படியில்
இன்று நான்
ஒரு
குற்றவாளியைப் போல்
நின்று கொண்டிருக்கிறேன்
**– உருதுக் கவிதை**

நீயும் காதலித்தாய்
நானும் காதலித்தேன்
ஆனால்
நீயும் நானும்
காதலித்துக்
கொள்ளவில்லை!
**– பாரதிபுத்திரன்**

காதல் அடைதல்
உயிரியற்கை – அது
கட்டுக்குள் அடங்கிடும்
தன்மையதோ!
**– பாரதிதாசன்**

பற்றயர்ந்து அஞ்சிய பரிவு கண்டணைந்து – எனைச்
சற்றும் அஞ்சேல் எனத் தாங்கிய துணையே
தளர்ந்த அத்தருணம் என் தளர்வெலாம் தவிர்த்து – உட்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்த மெய்த்துணையே
துறையிது வழியிது துணிவிது நீ செய்யும்
முறையிது எனவே மொழிந்த மெய்த்துணையே
சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்து எனைக் கலந்த நன்நட்பே!
**– திருவருட்பா**

# வடக்கில் வாழ்வை வளமூட்டும் வாழ்வாதார செயற்திட்டங்கள்

## மாசியப்பிட்டியில் மாதிரிக்கிராமம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமைத்துவத்துடன் கூடியதான வழிகாட்டலுடன் பல்வேறு சிறுகைத்தொழிற் துறைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

வலிதென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாசியப்பிட்டி பனங்கைப்பணி மாதிரிக் கிராமப் பயனாளிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான பனை அபிவிருத்தி சபையினூடாக வடக்கு கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் பனைசார் உற்பத்திகளை வளர்த்தெடுக்கும் முகமாக பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு .வருவதுடன் அவற்றினூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரமும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், துறைசார்ந்தோருக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வரும் அதே வேளை, அவற்றுக்கான தொழில உபகரணங்களும் வழங்கப்பட்டு வருவதுடன் முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபா கருத்திட்டத்திற்கமைவாக பனை அபிவிருத்திச் சபையூடாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை 2013ஆம் ஆண்டு மென்மேலும் மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

அடுத்தடுத்த கட்டங்களில் பலமில்லியன் ரூபா செலவில் கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், பயிற்சித் திட்டங்களோடு நின்று விடாது நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப பலசிறப்புப் பயிற்சிகளையும் பெற்று, தரமான உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டுமென்வும், அதுதொடர்பில் வங்கிகளினூடான இலகுகடன் திட்டங்களை துறைசார்ந்தவர்களுக்கு வழங்கவும் பனை அபிவிருத்தி சபையூடாக அமைச்சர் நடவடிக்கை முன்னெடுத்துள்ளார்.

அத்துடன் பனை அபிவிருத்தி சபையை மட்டுமல்லாது அமைச்சின் கீழ் சங்கானையில் மட்பாண்ட தொழில், சாறிவடிவமைப்பு, தோற்பொருள் தொழிற்சாலை அல்லாரையில் தும்புத்தொழில் ஆகிய சிறிய கைத்தொழில்துறைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையையும் இயக்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், யாழ். குடாநாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது சிறந்த தலைமைத்துவத்துடன் கூடியதான வழிகாட்டலுடன் பல்வேறு சிறுகைத்தொழில் துறைகள் முன்னேற்றம் கண்டு வருவதாகவும், இது எதிர்காலத்தில் மேலும் பன்மடங்கு விரிவாக்கம் செய்யப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையுரையாற்றும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது நல்வழிகாட்டலுக்கமைவாக பனை அபிவிருத்தி சபையின் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பனை சார்ந்த தொழிற்துறையை மென்மேலும் வளர்த்தெடுக்கும் முகமாக நாட்டில் இரண்டு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் தாளங்குடா, வடமாகாணம் யாழ்ப்பாணத்தில் மாசியப்பிட்டி ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பனை வளத்தின் மூலம் கிராமங்களையும், மாவட்டங்களையும் மட்டுமல்லாது எமது தேசத்தையும் வளப்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வலிதென்மேற்கு பிரதேச செயலர் முரளிதரன் உரையாற்றியதைத் தொடர்ந்து பனை அபிவிருத்திச் சபையின் கீழான சிறுகவடுகள் கட்டமைப்பின் செயற்திட்டங்கள் தொடர்பாக பணிப்பாளர் பவானி தங்கத்துரையும், மாதிரிக் கிராமத்தின் திட்டம் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் லோகநாதனும் விளக்கமளித்தனர்.

நிகழ்வில் பனம் கைப்பணி மாதிரிக் கிராம பயனாளிகளுக்கான உபகரணத் தொகுதிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும், அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியும் வழங்கி வைத்தனர்.

# கல்விசார் ஊழியர்களின் சம்பளப்பிரச்சினைக்கு தீர்வு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் சம்பளப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒன்றியத்துக்கும், பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன்போது தங்களது வேதனப் பிரச்சினை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின் செயலாளர் டெரன்ஸ் மடுஜித் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, தங்களின் வேதன பிரச்சினைக்கு இதன் போது இணங்ககூடிய தீர்வு ஒன்று வழங்கப்பட்டதாக தெரிவித்தார்

# பண்டிகைக்கால போக்குவரத்து பொதுமக்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தையொட்டி மேலதிக பேருந்துகள் மற்று ரயில்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் படி 24 மணி நேரமும் செயற்படும் வகையில் நேற்று முன்தினம் முதல் தூர இடங்களுக்கான மேலதிக பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழு கூறியது.

உற்சவ காலத்தில் பயணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிடும் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதனை கவனிக்க கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த உள்ளதாகவும் ஆணைக்குழு தலைவர் ரொசான் குணவர்தன கூறினார். ஜனவரி முதலாம் திகதி வரை மேற்படி விசேட பேருந்து சேவை இடம்பெறும். இதேவேளை பண்டிகைக் காலத்தையொட்டி 6 மேலதிக ரயில்கள் சேவையில் உள்ளன.

பதுளை, நீர்கொழும்பு, அநுராதபுரம், களுத்துறை ஆகிய பகுதிகளுக்கு இவ்வாறு மேலதிக ரயில்கள் ஈடுபடுத்தப்படும்.

பதுளைக்கு காலை 8.10 மணிக்கும் நீர்கொழும்புக்கு 8.30 மணிக்கும் அநுராதபுரத்திற்கு காலை 6.50 மணிக்கும் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

பண்டிகை காலத்தையொட்டி நேற்று முதல் மேலதிக இ.போ பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 21, 22, 24, 28, 29, 30ஆம் திகதிகளில் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடும் 150 மேலதிக பஸ்கள் இதன்படி மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# இன்று முதற் திருப்பலி நிறைவேற்றும் அருட்பணி வி.பி.தனேந்திரா அடிகளார்



அருட்பணி வி.பி. தனேந்திரா அடிகளார் டிசம்பர் 21, 2012 புனித தோமாவின் திருநாளாகிய அன்று, கொழும்பு வாழும் மீட்பர் பேராலயத்தில் கொழும்பு மறைமாவட்டப் பேராயர் அதி.வண.டி.ஆர். கனகசபை ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த (அங்கிளிக்கன் திருச்சபை) வி.பி. தனேந்திரா அடிகளார் தனது தாய்ச்சபையான நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தில் இன்று (23.12.2012) காலை 7.00 மணிக்கு தனது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்துச் சிறப்பிக்கவுள்ளார்.

இறைபணிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அவர் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியராகவும், சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாகவும், சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் வளாகக் குருவாகவும் பணியாற்றி வருகின்றார்.

அரியாலை கிராமத்தைச் சேர்ந்த பரமசாமி றோசாமலர் ஆகியோருக்கு நான்காவது மகவாய் 21.08.1978 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/நல்லூர் ஆனந்த வித்தியாசாலை, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டையிலும், உயர்நிலைக் கல்வியை சென். சாள்ஸ் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணத்திலும் கற்றுத் தேறினார்.

பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி சமூகவியல் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார் (B.A). இதனைத் தொடர்ந்து செரம்பூர் பல்கலைக் கழகத்தில் இறையியல் துறையில் (B.Th.) பட்டதாரியானார். மற்றும் "ஆலோசனையும் குழு வேலையும்" என்னும் துறையில் டிப்ளோமா கற்கைநெறியையும் (Dip.in. Coun...) கற்றுத் தேறினார்.

நிறைந்த ஆளுமை கொண்ட வி.பி.தனேந்திரா அடிகளார் சிறுவயது முதல் எழுத்துத் துறையில் பிரகாசித்து வருகின்றார். அடிகளாரின் கட்டுரைகள், கவிதைகள் பத்திரிகைகளிலும் மற்றும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

'சிந்தனைச் சுடர்' (2006), 'மனம் வெளுக்க...' (2006), 'நம்பிக்கை வரிகள்' (2008), 'நவாலியூரானின் கலை இலக்கியப் பணிகள்' (2008), சமூக மாற்றத்திற்கு வித்திட்டவர்கள் (2012) ஆகிய நூல்களையும் மேலும் 40 இற்கு அதிகமான நூல்களைத் தொகுத்தும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் திருச்சபையின் முதல் தமிழ் பத்திரிகையாகிய "தெளிவு" பத்திரிகையை 2001 ஆம் ஆண்டு ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராகவும், வடிவமைப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். திருமறைக் கலாமன்றத்தின் கலை இலக்கிய சமூக இதழாகிய "கலைமுகம்" சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் 2005 - 2008 வரை சிறந்த முறையில் பணியாற்றினார். 300 இற்கும் அதிகமான கிறிஸ்தவ கீர்த்தனைப் பாடல்களையும் எழுதியுள்ளார். பாடசாலைக் காலத்தில் சிறந்த நடிகனுக்கான தங்கப் பதக்கத்தை யாழ்.மாவட்ட ரீதியாகப் பெற்றுக் கொண்டார். பல நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார்.

சிறந்த பேச்சாற்றல் கொண்ட வி.பி.தனேந்திரா அடிகளார், இறையியல் கருத்துக்களை மக்களின் மனங்களைக் கவரும் வகையில் எடுத்துரைப்பதிலும் வல்லவர். கற்பித்தல் துறையிலும் சிறந்து விளங்கினார்.

வி.பி.தனேந்திரா அடிகளார் மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழவும், பல சாதனைகள் படைக்கவும், இந்நாளில் இறைமக்கள் அவரை வாழ்த்துகின்றனர்.

**சி.என்.எச்.சாள்ஸ்**
**தொகுப்பாசிரியர்,**
**'வலை' நல்லூர்.**

# க.பொ.த. (உயர்தரம்) அலகு ரீதியான குறிப்புகள்

**இரசாயனவியல்**

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

*நேற்றைய தொடர்ச்சி...*

## முறைசார் ஏற்றம் Formal Charge (F-C)

தனியாக்கப்பட்ட அணுவின் வலுவளவு இலத்திரன்களில் இருந்து லூயியின் கட்டமைப்பில் பங்குபெறும் இலத்திரன்களின் எண்ணிக்கையினைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவது முறைசார் ஏற்றம் ஆகும்.

முறைசார் ஏற்றத்திற்கான சமன்பாடு கீழ்வருமாறு லூயியின் கட்டமைப்பிலுள்ள

FC = வலுவளவு இலத்திரன்களின் எண்ணிக்கை -1/2 x அணுவைச் சூழ உள்ள பிணைப்பு இலத்திரன்களின் எண்ணிக்கை தனிச்சோடிகளாக உள்ள இலத்திரன்களின் எண்ணிக்கை

**FC இற்கான விதிகள்**

1. மூலக்கூறுகளுக்கு வழமையான பொருத்தமான லூயியின் கட்டமைப்பு ஒன்றாக இருப்பின் அதற்கு FC இருக்காது (அதாவது எல்லா அணுக்களுக்கும் Fc 0 ஆக அமையும்)
2. எங்காவது FC தேவைப்பட்டால் அவை சிறியதாக இருத்தல் பொருத்தமானது.
3. மிகவு மின் எதிரான அணுக்களிற்கு எதிரான FC ம் மின்நேரான அணுக்களிற்கு நேரான FC ம் காணப்படும்.
4. லூயியின் கட்டமைப்பிலுள்ள அணுக்களின் FC களின் கூட்டுத் தொகை 0 ஆக அமையும் நிகர ஏற்றத்தினைக் கொண்ட பல் அணு அயன்களில் FC களின் கூட்டுத்தொகை நிகர ஏற்றமாக அமையும்.

மேலே உள்ள விதிகளின் அடிப்படையில் கீழே தரப்பட்ட மூலகங்களுக்கு லூயியின் கட்டமைப்புக்களை வரைக.

1. $NO_2$ 2. $SO_3^{2-}$

i. $NO_2$

விதி i. O - N - O (N மிகக் குறைந்த மின் எதிரானது)

விதி ii. N = 5

2 x O = 12

(-) ஏற்றம் = 1


18

விதி

iii. சட்டகக் கட்டமைப்பில் இரு ஒற்றைப் பிணைப்புக்கள் உண்டு


$18 - 4 = 14/2 = 7$ சோடி $e^n$ கள்

iv)




v. N இற்கு அட்டக அமைப்பிற்கு $e^n$ பற்றாக் குறையாக உள்ளது. இதனால் O இனது தனிச்சோடி $e^n$ கள் N இற்கும் O இற்குமிடையில் இரட்டைப் பிணைப்பைத் தோற்றுவிக்கும்.

iv




vii. $SO_3^{2-}$

விதி i



விதி ii. S = 6


3 x 0 = 18

2(-) ஏற்றம் +2


26

விதி iii. 26 -6 = 20/2 = 10 $e^n$ சோடி


விதி iv.



விதி v



vi





**கற்கை வினாக்கள்**

பின்வரும் மூலக்கூறுகளுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய லூயியின் கட்டமைப்புக்களை வரைக


1. $CO_3^{2-}$ 2. $NO_3^-$ 3. NOCl 4. $N_2O_3$ 5. $S_2O_3^{2-}$

**விடைகள்**




## பரிவு (Resonance)


தரப்பட்ட மூலக்கூறு அல்லது அயன் ஒன்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட லூயியின் கட்டமைப்புக்கள் வரையக்கூடியதாக இருப்பின் பரிவு எனப்படும். $O_3$ மூலக்கூறின் லூயியின் கட்டமைப்பு பின்வருமாறு வரையப்படலாம்.



இந்தக் கட்டமைப்பு மாறிக்கொண்டிருக்கும் என பரிசோதனை ரீதியாக அறியப்பட்டுள்ளது. $O_3$ யில் இரு O -O பிணைப்பு நீளங்களும் 128 Pm ஆக இருந்தமை பரிசோதனை ரீதியாக அறியப்பட்டது. ஆனால் இங்கு இரு வகையான பிணைப்புக்கள் இருப்பதனால் இருவேறு நீளமுடைய பிணைப்புக்கள் இருக்க வேண்டும். அதாவது பரவொட்சைட்டில் சாதாரணமான O - O பிணைப்பு நீளம் 147 pm $O_2$ மூலக்கூறில் சாதாரணமாக O - O பிணைப்பு நீளம் 121 pm. ஆனால் $O_3$ இல் இரண்டு பிணைப்புக்களும் ஒரே நீளமுடையவையாகவும் ஒன்றைப் பிணைப்புக்கும் இரட்டைப் பிணைப்பிற்கும் இடைப்பட்டதாகவும் அமைகின்றது. இந்தத் தோற்றப்பாட்டில் இருந்து பிரிவு என்பதற்கான எண்ணக்கரு கட்டியெழுப்பப்படுகின்றது.


தரப்பட்ட மூலகங்களிற்கு அல்லது அயனிற்கு இலத்திரன் ஒழுங்கமைப்பு அல்லது பரம்பலின் வேறுபாட்டின் அடிப்படையில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட லூயியின் கட்டமைப்புக்கள் வரையப்படலாம். இந்நிலையில் பரம்பல் சரியாகக் காட்ட தனியான லூயியின் கட்டமைப்பு போதுமானதல்ல. உண்மையான கட்டமைப்பு பரிவுக்கலப்பு வடிவத்தினால் கூறப்படும். தனித்தனியாகப் பரிவுக் கட்டமைப்புக்கள் பங்களிப்பு அல்லது அங்கத்துவக் கட்டமைப்புக்கள் (Contributing Strutures) என வரையறுக்கப் படுகின்றன. பரிவுக் கட்டமைப்புக்கள் அல்லது பரிவு வடிவங்கள் யாவும் கொள்கையளவானவை அல்லது கற்பனைக்குரியவை.

$O_3$ மூலக்கூற்றைக் கருதினால் அதற்கு இரண்டு சமமான பரிவுக் கட்டமைப்புக்கள் வரையப்படலாம். இவை இரண்டினதும் சக்திகள் சமனானவை கீழ்வருமாறு காட்டலாம்.



பரிவினைக் காட்டுவதற்கு இரு தலை அம்புக்குறி பயன்படுத்தப்படும். இது மூலக்கூற்றின் இலத்திரன் கட்டமைப்பை தனித்தனியாக விளங்கவைக்க முடியாது. இது முக்கியமானது இருதலை அம்புக்குறிகள் ஒரு செயன் முறையைக் குறித்துக் காட்டவில்லை. பரிவுக் கட்டமைப்புக்கள் இரண்டும் தம்மிடையே மாற்றப்படலாம் என்பதையே குறிக்கின்றது. $O_3$ தனியே ஒரு கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இது முன்பின்னாக அலைய முடியாதது. பரிவுக் கட்டமைப்புக்களிடையே கோவேறு கழுதையைக் கருதுக. இது குதிரையினதும் கழுதையினதும் இடைக் கலப்பினால் உருவானது. எனவே இது இரு விலங்குகளின் இயல்புகளையும் காண்பிக்கும். அத்துடன் இது ஒரு முற்றிலும் வேறான விலங்காகவும் இருக்கும்.

$O_3$ மூலக்கூற்றைக் கருதுக. இது பிரிவினால் இரு கட்டமைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும். இவ்விரு கட்டமைப்புக்களையும் கருத்திற்கொண்டு வரையப்படும். தனியான கட்டமைப்பு பரிவுக்கலப்புக் கட்டமைப்பு எனப்படும். இங்கு நிலையான 6 பிணைப்புக்கள் திண்மக் கோட்டினாலும், π பிணைப்புக் கள் புள்ளிக் கோட்டினாலும் குறிக்கப்படும்.




**பரிவுக் கலப்பு வரைவதற்கான விதிகள்**

1. முதலில் சட்டகக் கட்டமைப்பினை வரைந்து அதிலுள்ள நிலையான எல்லாக் கட்டமைப்புக்களிலுமுள்ள பிணைப்புக்கள் திண்மக் கோட்டினால் வரையப்படும்.

2. சிலவேளைகளில் மட்டும் பிணைப்பு உருவாகும் இடங்கள் புள்ளிக் கோட்டினால் குறித்து வரையப்படும்.

3. ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு பரிவுக்கட்டமைப்பிலும் குறித்துக் காட்டப்பட்ட தனிச்சோடி இலத்திரன்கள் வரையப்படும்.

4. முன்னர் விபரிக்கப்பட்டவாறு ஒவ்வொரு அணுவிற்கும் உரிய ஏற்றங்களை வழங்குதல்.




**பரிவின் இயல்புகள்**


1. வழங்க கட்டமைப்புக்கள் உண்மையானவையல்ல. அவை வசதியாக வரையப்படும் கற்பனைக் கட்டமைப்புக்கள் ஆகும். பரிவுக் கலப்புக் கட்டமைப்பு மாத்திரம் உண்மையான மூலக்கூறாகும்

2. பரிவின் விளைவாக பரிவில் ஈடுபடும் அலகுகளின் பிணைப்பு நீளங்கள் சமனானவையாகும்.

3. பரிவுக் கலப்பு கட்டமைப்பு தாழ்ந்த சக்தியைக் கொண்டிருப்பதுடன் ஏனைய வழங்கல் கட்டமைப்புக்களைக் காட்டிலும் கூடிய உறுதி உடையதாக இருத்தல்.

4. சமனான பரிவுக் கட்டமைப்புக்கள் பரிவுக்கலப்பிற்கு சமனான பங்களிப்பை வழங்கும்.

5. சமனற்ற பரிவுக் கட்டமைப்புக்கள் சமனற்ற வழங்கல்களை உருவாக்கும். $O_3$ மூலக்கூறின் பரிவுக்கலப்பிலுள்ள O - O பிணைப்பின் பிணைப்பு வரிசை அவற்றின் பரிவுக் கட்டமைப்புக்களை உபயோகித்து துணியப்படும்.




$$\text{பிணைப்பு வரிசை} = \frac{2+1}{2 \text{ கட்டமைப்புக்கள்}} = 1\,{}^{1}/_{2}$$

தரப்பட்ட மூலக்கூறு அல்லது அயனிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிவுக் கட்டமைப்புக்கள் வரைவதற்கான விதிகள்.

1. பொருத்தமான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய லூயியின் கட்டமைப்புடன் ஆரம்பித்தல்.

2. ஒரு லூயியின் கட்டமைப்பிலிருந்து இன்னுமொரு லூயியின் கட்டமைப் பிணைப் பெறுவதற்கு வளைந்த அம்புக்குறியினைப் பயன்படுத்தல் வேண்டும்.



வளைந்த அம்புக்குறி ஒரு சோடி இலத்திரன்களின் நகர்வினைக் குறித்து நிற்கும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிவுக் கட்டமைப்புக்களிற்கான விதிகள்.

1. எல்லாப் பரிவுக் கட்டமைப்புக்களிலும் அணுக்களின் நிலைகள் ஒன்றாகவே இருக்கும் இலத்திரன்களின் அமைவு மட்டும் மாறிக்கொண்டிருக்கும். (π பிணைப்புக்களும், தனிச்சோடி இலத்திரன்களும்)

2. பிணைப்புச் சட்டகம் தொடரப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

3. எல்லாப் பிரிவுக் கட்டமைப்புகளிலும் உள்ள இலத்திரன் சோடிகளின் எண்ணிக்கை சமனாக இருத்தல் வேண்டும்.

4. பிரிவுக் கட்டமைப்புக்கள் ஒரே மாதிரியானதாக இருத்தல் கூடாது.

5. எல்லாப் பரிவுக் கட்டமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய லூயியின் கட்டமைப்புக்களாக இருத்தல் வேண்டும். 2 ஆம் வரிசை மூலகங்கள் அட்டமத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

6. எல்லாப் பங்களிப்பு அல்லது அங்கத்துவ கட்டமைப்புக்களும் நிகர ஏற்றத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பரிவுக் கட்டமைப்புக்களின் தொடர்பு உறுதித்தன்மையை மதிப்பிடு செய்வதற்கான விதிகள்


1. கூடுதலான பங்கீட்டுவலுப் பிணைப்புக்களுடன் குறைந்த முறைசார் ஏற்றம் வழங்கலுடன் உள்ள கட்டமைப்புக்கள் மிகவும் உறுதியானவை.

2. அருகிலுள்ள அணுக்கள் ஒரே குறியினையுடைய முறைசார் ஏற்றத்தைக் கொண்டிருப்பின் உறுதியற்றதாக மாற எத்தனிக்கும்.

3. எதிரெதிரான முறைசார் ஏற்றங்கள் அணுக்களின் மீது இடப்படும்போது மின்நேரான அணுவின் மீது நேரேற்றமும் மின் எதிரான அணுவின் மீது எதிரேற்றமும் இடப்படும். கட்டமைப்பு உறுதியானது.

உதாரணம் : பின்வரும் மூலக்கூறுகள் அல்லது அயன்களின் பரிவுக் கட்டமைப்புக்களையும் பரிவுக் கலப்புக் கட்டமைப்பினையும் எழுதுக. அவற்றின் உறுதித்தன்மையைப் பற்றி விபரிக்குக.

1) $NO^{-3}$ ii) $N_2O$



ஒட்சிசன் அணுவின் ஏற்றங்கள் பின்வருமாறு கணிக்கப்பட்டன 3 பரிவுக் கட்டமைப்புக்களிலும் உள்ள மொத்த (-) ஏற்றங்கள் $= -2 \times 3$

$= -6$


(-) ஏற்றம் வழங்கப்பெற்றுள்ள ஒட்சிசன் அணுக்கள் $= 9$


ஆகவே ஒரு O அணுவிற்கான ஏற்றம் $= \frac{-6}{9}$

$= -2/3$

உறுதித்தன்மை எல்லாப் பரிவுக் கட்டமைப்புக்களும் சம உறுதியானவை.

ii) $N_2O$




**உறுதித்தன்மை**

எல்லாப் பரிவுக் கட்டமைப்புக்களும் ஒத்தவை அல்ல. கட்டமைப்பு B குறைவான இலத்திரன் வழங்கல்களை உடையது. எனவே A யும் C யும் ஒப்பீட்டளவில் உறுதியானவை. B குறைந்த உறுதியுடையது.

*(தொடரும்...)*

ஒவ்வொரு சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அலகு ரீதியான மாதிரி வினாக்களும் விடைகளும் வெளிவரும்

# பிரதமர் ஆகும் அனைத்து தகுதியும் நரேந்திர மோடிக்கு உண்டு



பிரதமராகும் அனைத்து தகுதியும் நரேந்திரமோடிக்கு உண்டு என பாரதீய ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடு ஐதராபாத்தில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குஜராத்தில் பாரதீய ஜனதா 5 ஆவது முறையாக வெற்றி பெற்று உள்ளது. நரேந்திரமோடி 4 ஆவது முறையாக முதல்- மந்திரி ஆகிறார். இதன்மூலம் நாடு மட்டுமல்ல உலகம் முழுவதும் மோடி பேசப்படுகிறார்.

வருகிற நாடாளுமன்ற தேர்தலில் நரேந்திரமோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று எல்லா தரப்பிலும் இருந்தும் கோரிக்கைகள் வருகிறது. மோடிக்கு பிரதமர் ஆகும அனைத்து தகுதியும் உள்ளது. இருந்தாலும் யார் பிரதமர் வேட்பாளர் என்பதை 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்கட்சி மேலிடம் கூடி முடிவு எடுக்கும்.

இமாச்சல பிரதேசத்தில் கட்சி பு,சல் காரணமாக பாரதீய ஜனதா ஆட்சியை இழந்துள்ளது. எங்கள் தோல்வியை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் காங்கிரஸ் தங்கள் தோல்வியை கௌரவமாக ஏற்பது இல்லை. மோடியின் செல்வாக்கு குறைந்துவிட்டதாக ப.சிதம்பரம் கூறுவது கேலிககுரியதாகவுள்ளது என்றார்.

இந்தியச் செய்திகள்

# முதல்வரை அவதூறாகப் பேசினார் விஜயகாந்த் மீது வழக்கு

(சென்னை)



பெரம்பலூர் மாவட்ட தே.மு.தி.க. சார்பில் கடந்த ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி பெரம்பலூர் வானொலி திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். கூட்டத்தில் அ.தி.மு.க. அரசின் செயல்பாடுகள் மற்றும் முதல்வரை அவதூறாக பேசியதாக கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து அரசு சார்பில் விஜயகாந்த் மீது அவதூறு வழக்கு தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டது. பெரம்பலூர் மாவட்ட அரச சட்டத்தரணி குலோத்துங்கன், மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 23 ஆம் திக்தி வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட பெரம்பலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதி மன்ற நீதிபதி ராமசாமி, விஜயகாந்த் டிசம்பர் 21 ஆம் திகதி நீதிமன்றில் நேரில் ஆஜராக வேண்டும் என்று உத்தர விட்டார்.

இந்த வழக்கு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது பெரம்பலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விஜய காந்த் சார்பில் ஆஜரான கட்சியின் சட்டத்தரணிகள் சேதுபதி, செந்தில்குமார் ஆகியோர் விஜயகாந்த் மீது வழக்கு தொடர்வதற்காக பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப் பித்துள்ளது என்று தெரிவித்தனர்.

இதையடுத்து வழக்கு விசாரணையை ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஒத்திவைத்து மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி ராமசாமி உத்தரவிட்டார்

## நடிகை மனிஷாகொய்ராலா வீடுதிரும்பியுள்ளார்

தமிழில் பம்பாய், முதல்வன், பாபா உள்ளிட படங்களில் நடித்தவர் மனிஷா கொய்ரலா இந்தியில் முன்னணி , நடிகையாக உள்ளார். மனிஷாகொய்ரலாவுக்கு 1989 இல் திருமணம் நடந்தது. தற்போது கணவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்கிறார்.

இரு வாரங்களுக்கு முன்பு மனிஷாகொய்ரலாவுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. உடனடியாக மும்பை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர்.. உடல் பரிசோதனையில் அவருக்கு புற்று நோய் இருப்பது தெரிய வந்தது. இதனால் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். உயர் சிகிச்சைக்காக அமெரிக்கா அழைத்து சென்றனர். நியூயோர்க்கில் உள்ள ஆஸ்பத்திரியில் மனிஷா கொய்ரலா அனுமதிக்கப்பட்டார். டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்ய முடிவு செய்தனர்.

# மருத்துவ துறையில் சாதனை இந்தியருக்கு அமெரிக்க விருது

அமெரிக்காவில் மருத்துவம் மற்றும் நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்பிற்கான உயரிய விருதை இந்தியர் ஒருவர் பெறுகிறார்.கடந்த 1959 ஆம் ஆண்டு முதல் தொழில் நுட்பம் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்காக தேசிய அளவிலான விருதுகளை அமெரிக்கா வழங்கி வருகின்றது.

இந்த ஆண்டு இவ்விருதினை பெறுபவர்கள் பட்டியலில், அமெரிக்காவில் வாழும் இந்தியரான ரங்கசுவாமி சீனிவாசனின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளார்.

ஐ.பி.எம். நிறுவனத்தின் கீழ் இயங்கும் டி.ஜே. வாட்சன் ஆராய்ச்சி மையத்தில் தற்போது பணியாற்றி வரும் ரங்கசுவாமி சீனிவாசன், 1949 ஆம் ஆண்டு, சென்னை பல்கலைக் கழகத்தில் அறிவியல் இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்றவர்.

மருத்துவ துறையில் பயன்படுத்தப்படும் லேசர் சிகிச்சைகள் குறித்து இவர் நடத்திய ஆராய்ச்சியின் பலனாக கண் ஆபரேஷனில் நவீன முறையான "லேசிக" சிகிச்சை முறை 1983-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் பல லட்சம் மக்கள் பார்வை குறைபாட்டில் இருந்து நிவாரணம் பெற முடிந்தது.

ரங்கசுவாமி சீனிவாசனுடன் மேலும் 12 ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த விருதுகளை வ்ழங்க ஒபாமா பரிந்துரைத்துள்ளார்.

அமெரிக்க கண்டுபிடிப்பாளர்களான இவர்களை கௌரவிப்பதில் நான் பெருமைப்படுகின்றேன். இந்த நாட்டிற்கு இவர்கள் தங்களின் கண்டுபிடிப்பின் மூலம் பெருமை தேடித் தந்துள்ளனர் என்று ஒபாமா கூறியுள்ளார்.

வரும் ஜனவரி மாதம் வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில் ரங்கசுவாமி சீனிவாசனுக்கு, இவ்விருதினை ஒபாமா வழங்குகின்றார்.

# விலைபோகாத கட்சி அ.தி.மு.க

## நாஞ்சில் சம்பத்



விலைபோகாத கட்சி அ.தி.மு.க. என அ.தி.மு.க. கொள்கை பரப்பு துணை செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

ஆட்சி பொறுப்பில் உள்ள ஒரு அரசுக்கு ஆக்கபூவர்மான யோசனைகளை தெரிவிப்பது எதிர்க்கட்சிகளின் கடமையாக இருக்க வேண்டும். ஆனால் தமிழகத்தில் அந்த நிலை இல்லை. தமிழகத்தில் மின்வெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக கட்சியின் செயற்குழுவை கூட்டிய பெருமை அதன் தலைவர் கருணாநிதியை சாரும்.

காவிரி பிரச்சினை, சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீடு உள்ளிட்ட மக்களை வஞ்சிக்கிற எத்தனையோ பிரச்சினைகள் இருந்தும் கூட அதைப் பற்றியெல்லாம் சிந்திக்க கருணாநிதிக்கு நேரமில்லை. தி.மு.க. ஆட்சியில் இருந்த போது மின் உற்பத்தி அதிகரிப்பதற்கான எந்த திட்டங்களையும் செயற்படுத்தவில்லை.

அதனால் தற்போது நிலவி வரும் மின்பற்றாக்குறைக்கு தி.மு.கவே காரணம் இந்திய அரசியல் கட்சிகளில் விலை போகாத ஒரே அரசியல் கட்சி அ.தி.மு.க. தான். அந்த கட்சியில் இணைந்ததற்கு பெருமைப்படுகிறேன். கடந்த 2001 முதல் 2006 வரையிலான அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் மின் உற்பத்தி எனபது 10 ஆயிரத்து 500 மெகா வாட்டாக இருந்தது. அப்போது மின் தேவை என்பது 10 ஆயிரம் மெகாவாட் தான். 500 மெகாவாட் மின்சாரம் உபரியாக இருந்தது.

எனவே தமிழகம் மின்மிகை மாநிலம் என்ற தகுதி பெற்றது. தற்போது இருந்து வரும் நிலைமையை சீர்படுத்துவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா அனைத்து நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளார். அத்துடன சூரிய சக்தி மூலம் 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய அவர் திட்டமிட்டு செயற படுத்தி வருகிறார். இதற்கான பணிகளும் வேகமாக நடைபெற்று வருகிறது. ஜூன் மாதம் மின்வெட்டு பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என்றார்.

# மாணவி கற்பழிப்பு எதிரொலி ஜனாதிபதி மாளிகை முற்றுகை

புதுடில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி கற்பழிக்கப் பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பெண்கள் அமைப்பினர் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட முயற்சி செய்து வருகின்றனர். பாலியல் வன்முறைக் கொடுமையைக் கண்டித்து தலைநகர் டில்லியில் பல்வேறு இடங்களில் ஐந்தாவது நாளாக போராட்டங்கள் நடைபெற்றன.


இதில் மகளிர் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் ஜனாதிபதி மாளிகைக்கு உள்ளேயும் நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டில்லியின் முக்கிய இடங்களில் போராட்டங்கள் நடத்த ஜவாஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர்கள், டில்லி பல்கலைக்கழக மாணவர்கள், ஐஐடி மாணவர்கள், பெண்கள் அமைப்பினர், தன்னார்வத் தொண்டு அமைப்புகளின் ஆர்வலர்கள், அகில இந்திய ஜனநாயக மாதர் சம்மேளனம், இந்திய பெண்கள் அமைப்புகளின் தேசிய கூட்டமைப்பு, இளம் பெண்களுக்கான கிறிஸ்துவ சங்கம், இஸ்லாமிய பெண்கள் மன்றம் உள்ளிட்ட மகளிர் அணியினர் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் கொடுமைக்குக் கண்டனம் தெரிவித்துக் கோஷம் எழுப்பினர்.

இந்தியா கேட் பகுதியில் பாலியல் கொடுமை சம்பவங்கள் தொடர்பாக ஏராளமான மாணவர்கள் ஆங்காங்கே கூட்டங்களை நடத்தி ஆதரவு திரட்டினர். போராட்டத்தில் பங்கேற்ற பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் பகல் 1 மணியளவில் ராஜபாதை வழியாக ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாயில் முன்பாகத் திரண்டனர்.

6 ஆவது நாளாக இன்றும் பெண்கள் அமைப்பினர் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால் ஜனாதிபதி மாளிகை முன்பு மிகவும் பதற்றமான சூழல் காணப்படுகிறது.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் தடியடி நடத்தியும், தண்ணீர் பாய்ச்சி அடித்துமுள்ளனர்.



# கடும் உறைபனியின் கொடூரம்;
# ரஷ்யா,உக்ரைனில் 200பேர் பலி

உக்ரைன், போலந்து, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் மிக கடுமையான உறைபனிக்கு 200 பேர் வரை பலியாகி உள்ளனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உறைபனிக்கு கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 56 பேர் பலியாகி விட்டனர், 371 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர்.

ரஷ்யாவின் ஐரோப்பிய பகுதிகளில் ஒன்றான உக்ரைனில் பெய்துவரும் உறைபனிக்கு 83 பேர் பலியாகியுள்ளனர்.

அவர்களில் 57 பேரின் சடலங்கள் சாலையோரம் காணப்பட்டன. இவர்கள் அனைவரும் வீடுகளின்றி சாலையோரம் வசித்து வந்த ஏழை மக்கள் என கூறப்படுகின்றது.

இதே போன்று கிழக்கு ஐரோப்பிய நாடான போலந்தில் - 10 பாகை செல்சியஸ் அளவிற்கு உறைபனி பெய்கின்றது.

இப்பகுதியில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 49 பேர் குளிர் தாங்காமல் பலியாகி உள்ளனர். இவர்களிலும் பெரும்பாலானவர்கள் வசிக்க வீடில்லாத ஏழைகள் என கூறப்படுகின்றது.

## மிக ஆபத்தான நிலையில் மண்டேலா



தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி மண்டேலா மிக ஆபத்தான நிலையில் இருபபதாக ஜனாதிபதி ஜேக்கப் சூமா தெரிவித்துள்ளார்.தென் ஆபிரிக்கா முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலா (வயது 94) உடல்நலம் பாதிக்கப்பட்டு 2 வாரத்துக்கு முன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர், மண்டேலாவின் உடல்நிலை தேறி வருவதாக தகவல் வெளியானது.இதே வேளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாநாட்டில் ஜனாதிபதி ஜேக்கப் சூமா பேசுகையில், மண்டேலாவின் நிலைமை அபாயகரமாகவே இருக்கிறது.

ஆனாலும் சிகிச்சைக்கு அவர் நன்றாக ஒத்துழைப்பு தருகிறார். எனவே சற்று சீரான முனேற்றம் ஏற்பட்டுவருகிறது என்று கூறியுள்ளார்.

# என்னுடைய பெயரை கல்லூரிக்கு வைக்கவேண்டாம்



## மலாலா கோரிக்கை

பாகிஸ்தானில் பெண்களின் கல்விக்காகவும், தலிபான்களுக்கு எதிராகவும் போராடிய மலாலா மீது தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர்.இதனையடுத்து பாகிஸ்தான் இராணுவ மருத்துவமனையில் கடுமையான காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த மலாலா, தற்போது லண்டனில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் உள்ள பெண்கள் கல்லூரிக்கு மலாலாவின் பெயரை சூட்ட முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவை எதிர்த்து சுமார் 150 மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தினர்.


மலாலாவின் பெயரைச் சூட்டினால், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும். அது எங்களுக்கு தான் ஆபத்து என்று கூறினர். இந்நிலையில் தனது பெயரை சூட்டுவதற்கு மலாலாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இந்த முடிவை கைவிடும்படி வேண்டுகோளும் விடுத்துள்ளதாக கல்லூரி ஆர்வலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கங்கணம் நடனத்துக்கு அமோக வரவேற்பு



தென்கொரிய பொப் பாடகரின் கங்கணம் நடனத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. அதை "யூடியூப்"பில் 100 கோடி பேர் பார்த்துள்ளனர். தென்கொரியாவின் பிரபல பொப் பாடகர் ப்சி. இவர் தனது பொப் இசை ஆல்பத்தில் கங்கணம் நடனம் ஆடியுள்ளார்.இவரது ஆல்பம் மம்மி போர்ன், பிஸ்கல் கிளிப் மற்றும் ரோம்னி சேம்பில்ஸ் என்ற பெயர்களில் வெளியாகி உள்ளன. இதற்கிடையே, கடந்த நவம்பரில் வெளியான இவரது கிளிப் என்ற குதிரை நடனத்துடன் கூடிய கங்கணம் ஸ்டைல் பொப் நடனம் மிகவும் பிரபலமானது.அதை ஹயூ டியூப்" இணைய தளத்தில் 100 கோடி பேர் கண்டு ரசித்துள்ளனர். இந்த ஆண்டு இசை ரசிகர்களிடையே இவர்தான் முதலிடத்தை பிடித்துள்ளார். இவரது இசை நிகழ்ச்சிகளுக்கு இங்கிலாந்தில் அமோக வரவேற்பு உள்ளது.

# மாயன் கலண்டர் முடிந்து புது யுகம் பிறந்தது



மாயன் கலண்டர் கூற்றுப்படி "உலகம் அழியும்" என பரப்பப் பட்ட வதந்தி பொய்யானது.

மெக்சிகோ நாட்டை பூர்வீகமாக கொண்ட மாயன் இனத்தினர், 5,126 ஆண்டுகளைக் கொண்ட கலண்டரை தயாரித்து பயன்படுத்தி வந்தனர்.இந்த கலண்டர் கி.மு.3114இல் தொடங்கி நேற்று முன்தினத்துடன் முடிந்தது. அதன் பின் இந்த கலண்டர் மறு சுழற்சிக்கு உட்பட்டது.

இந்த கலண்டர் முடிந்ததால் உலகம் அழிந்து விடும் என சிலரால் வதந்தி பரப்பப்பட்டது.ஆனால் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் இதை திட்டவட்டமாக மறுத்தது. இந்நிலையில் புதுயுகம் பிறந்துள்ளதை மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளில் உள்ள மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.




மெக்சிகோவில் உள்ள மாயன் கோவில்களில் பலர் வழிபாடு நடத்தினர். துருக்கியில் கன்னி மேரி, தேவலோகத்துக்கு சென்ற இடமாக கருதப்படும் சிரின்ஸ் மலையில் பலர் கூட்டு பிரார்த்தனை செய்தனர்.கவுதமாலா நாட்டிலும் மாயன் இன வம்சத்தவர்களாக கூறி கொள்பவர்கள், சில சடங்குகளை நடத்தினர்.அசம்பாவிதங்கள் ஏதும் நடக்காததால் உலகம் அழியும் என பரப்பப்பட்ட தகவல் வதந்தி என்பது நிரூபணமானது.

# தலிபான்கள் சடலங்களின் மீது சிறுநீர் கழித்த வீரருக்கு தண்டனை

படுகொலை செய்யப்பட்ட தலிபான்களின் சடலங்கள் மீது அமெரிக்க படையினர் சிறுநீர் கழித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.கடந்த ஜனவரி மாதம் இறந்து கிடக்கும் தலிபான்களின் மீது அமெரிக்க படையினர் சிறுநீர் கழிப்பது போன்ற வீடியோ வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனையடுத்து உடனடியாக 3 அமெரிக்க கடற்படை வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது.இந்நிலையில் ஜோசப் சேம்பலின் என்பவரும் இக்குற்றத்தை செய்ததாகவும், புகைப் படத்திற்கு போஸ் கொடுத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.இவர் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டதால், இவரின் அதிகாரம் குறைக்கப்



பட்டதோடு, 500 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# மைக்கேல் ஜாக்சனின் கையுறை ஒரு கோடி

பிரபல பொப் பாடகர் மைகேல் ஜாக்சன் கடந்த 2, 1/2 ஆண்டுகளுக்கு முன்பு மர்மமான முறையில் மரணம் அடைந்தார். அவர் மறைந்தாலும் அவரது புகழ் இன்னும் குறையவில்லை. இசை நிகழ்ச்சியின் போது அவர் பயன்படுத்திய ஆடைகள் மற்றும் பொருட்கள் ஏலம் விடப்பட்டு வருகிறது. அவற்றை அதிக விலை கொடுத்து அவரது இரசிகர்கள் வாங்கி செல்கின்றனர்.அது போன்ற சம்பவம் தற்போது நடந்துள்ளது. இவரது கையுறை ஒன்று சமீபத்தில் அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ நகரில் ஏலம் விடப்பட்டது. அது ஒரு கோடிக்கு ஏலம் போனது. இந்த தகவலை ஏல மையத்தின் உரிமையாளர் நேட்டி சாண்டர்ஸ் தெரிவித்தார்.

திரில்லர் இசை ஆல்பத்துக்காக இவருக்கு கடந்த 1984-ஆம் ஆண்டு அமெரிக்கா இசை விருது வழங்கப்பட்டது. அப்போது அவர் அணிந்திருந்த கருப்பு நிற கையுறை தான் இந்த அளவு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை ஏலம் விடப்பட்டுள்ள மைக்கேல் ஜாக்சன் பொருட்களில் இந்த கையுறை தான் கூடுதல் விலைக்கு ஏலம் சென்றுள்ளது.

# புகைபிடிக்காதீர்கள் இரசிகர்களை திட்டிய மடோனா



பிரபல பொப் இசை பாடகி மடோனா, தன்னுடைய இசை நிகழ்ச்சியின் போது புகைப் பிடித்த நபர்களை கண்டித்துள்ளார்.உலகம் முழுவதிலும் ஏராளமான இரசிகர்களை கொண்டவர் அமெரிக்க பொப் இசை பாடகி மடோனா(வயது 54).

இந்த வயதிலும் மேடையில் கவர்ச்சி உடை அணிந்து ஆடி, பாடி இரசிகர்களை கவர்ந்து வருகிறார். தென் அமெரிக்க நாடான சிலியில் அவரது இசை நிகழ்ச்சி நடந் தது. சான் டியாகோ நகரில் பிரமாண்ட மேடையில், ஏராளமான விளக்கு ஒளியில் அவர் சுழன்று ஆடிய படி, பாடினார். இவரது இசைக்கு ஏற்ப ரசிகர்களும் கைகளை தட்டிய படி ஆடினர். ஆனால் சில ரசிகர்கள் சிகரெட்டை பிடித்து கொண்டிருந்ததால், அப்பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது. இதை பார்த்த மடோனாவுக்கு கோபம் வந்து விட்டது.

பாடுவதை நிறுத்தி விட்டு, என்னை நீங்கள் மதித்தால நான் உங்களை மதிப்பேன். நீங்கள் புகை பிடித்து கொண்டே இருந்தால், நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டு சென்று விடுவேன் என்றார்.

# மீண்டும் துப்பாக்கி சூடு; அமெரிக்காவில் 4பேர் பலி

அமெரிக்காவில் கடந்த வாரம் கனெக்டிகட் மாகாணத்தில் நியூடவுனில் உள்ள தொடக்க பாடசாலைக்குள் புகுந்த வாலிபர் சுட்டதில் 20 குழந்தைகள் உள்பட 26 பேர் கொல்லப்பட்டனர். இது அமெரிக்காவில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது. இதைத்தொடர்ந்து துப்பாக்கி வைத்திருக்கும் சட்டத்தை கடுமையாக்க வேண்டும் என்ற குரல் நாடு முழுவதும் ஒலித்து வருகிறது. இருந்தாலும் அமெரிக்காவில் துப்பாக்கி சூடு கலாசாரம் ஓயவில்லை. பாடசாலைக் குழந்தைகளின் துயர சம்பவம் நடந்த ஒருவாரத்திற்குள் அங்கு மீண்டும் துப்பாக்கி சூடு சம்பவம் நடந்துள்ளது. பென்சில் வேனியா மாகாணத்தின் ஒதுக்குபுறத்தில் உள்ள கீசிடவுன் பகுதியில் நேற்று முன்தினம் மர்மநபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதில் அதில், 4 பேர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கி சூட்டை தடுத்த பொலிஸ் அதிகாரிகளும் சுடப்பட்டனர். அதில் பலர் காயம் அடைந்தனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. தற்போது அவர்கள் நிலைமை சீராக உள்ளது. இந்த தகவலை பென்சில் வேனியாவின் பிளேர் பகுதியை சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்

(மன்னார்)

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பமான குறித்த ஊர்வலம் மன்னார் வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்தது.

பின் அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மீண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை சென்றடைந்தது.

இதன்போது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.



ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு சென்றதோடு மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகித்தனர்.

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

நெல்லியடியில், 5 பிள்ளைகளின் தந்தையொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, இரும்பு மதவடி, நெல்லியடியைச் சேர்ந்த மரியராசா உதயபாஸ்கரன் (வயது-48) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் மின்சாரத் தடை ஏற்பட்ட சமயம் அவரது வீட்டில் நின்ற மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (116)

## ஆசிரியர் பற்றாக்குறை; கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிக் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் 50 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாக பூநகரிக் கோட்டக்கல்வி அதிகாரி தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 17 ஆம் திகதி ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கும்போது கோட்டக் கல்வி அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

பூநகரி கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் 50 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதில் சில பாடசாலைகளுக்கு முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாமல் உள்ளதாகவும் தெரிவித்த அவர், மாணவர்களின் பொதுப் பரீட்சைகளை கருத்தில் கொண்டு ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (கே)

# சிறுமி மீது துஷ்பிரயோகம் குடும்பஸ்தர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் 14 வயதுடைய சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த அயல் வீட்டில் வசித்து வந்த 42 வயது நபர் பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆம் மாதம் நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து அந்தச் சிறுமியின் பெற்றோர் வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்று மருத்துவ பரிசேதனைக்கு உட்படுத்திய போது சிறுமி கருவுற்றிருப்பது தெரிய வந்திருக்கின்றது.

இதனையடுத்துச் சிறுமியின் பெற்றோர் கடந்த 18 ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து குறித்த அயல் வீட்டில் வசித்து வந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும், இதன் பின்னர் அவர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் மேலும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல் தெரிவிக்கையில், பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தம் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 37 பேர் கடந்த வாரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் சட்டவிரோதமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நீதிமன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், குடிபோதையில் வாகனம் செலுத்தியது சம்பந்தமாக 18 பேர் மீதும் மாடு மற்றும் ஆடு வெட்டியது சம்பந்தமாக இருவர் மீதும் குடிபோதையில் வாகனம் செலுத்தியது சம்பந்தமாக 7 பேர் மீதும் நீதிமன்றில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட அவர், சூது விளையாடிய ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் இவ்வாறு ஐந்து பேரும், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் இருந்து நான்கு பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் இவர்கள் அனைவரும் பணத்திற்காகவே இந்த சூது விளையாட்டைப் பயன்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## சீரான மண் விநியோகம்

வடமராட்சி கிழக்கு அம்பன் கொட்டோடைப் பகுதியில் கடந்த 2 வாரகாலமாக மணல் ஏற்றுவதற்கு அப்பகுதி மக்கள் தடை விதித்திருந்த நிலையில் இன்று முதல் மணல் விநியோகம் சீராக இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஈ.பி.டி.பி.யின் பருத்தித்துறை அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அப்பகுதி மக்களுடனும், உழவு இயந்திர உரிமையாளர்களுடனும் கலந்துரையாடியதை அடுத்து அப்பகுதி மக்கள் மணல் ஏற்றுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து ஒரே இடத்தில் மணல் ஏற்றாது வெவ்வேறு மணல் திட்டிகளில் மணல் ஏற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டதோடு இன்று முதல் இம்மணல் விநியோகம் சீராக நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

## ஜனநாயகத்தின்...

காப்பின் பொருட்டு நீதிமன்றின் முன்னிலையில் நியாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது.

இதேவேளை, நீதியரசர்களுக்கு இருக்க வேண்டிய குணநலன்கள் தொடர்பிலும் அவர் விபரித்தார்.

சமூகத்திற்கு கிடைக்க வேண்டிய நியாயங்கள் தொடர்பில் சட்டத்தரணிகளின் தோள்களில் பாரிய கடமையொன்று இறக்கி வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நீதிமன்றக் கல்லூரியின் கொள்கைக்கு அமைய நீதியரசர் ஒருவரிடம் இருக்கவேண்டி குணாதியசங்கள் விளக்கப்பட்டுள்ளன.

அதில் பிரதானமானது, நீதிபதிகள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதுதான். அரசியலால் அவர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுகிறது. நியாயத்தை நிலைநாட்ட முடியாது.

இதுதவிர, அண்மைக்காலமாக தமக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட நிலைமைகளின் போது ஒன்றிணைந்து செயற்பட்ட நீதியரசர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். அதேவேளை, இலங்கையில் உள்ள நீதியரசர்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

## நீதிமன்ற...

ஆஜராக வேண்டுமென மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவினால் கடந்த மாதம் அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிச் சபாநயாகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

வெளிநபர்களோ நிறுவனங்களோ நாடாளுமன்றிற்கு உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது என சபாநாயகர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற விவகாரங்களில் நீதிமன்றம் தலையீடு செய்யக்கூடாது என்பது தொடர்பில் முன்னாள் சபாநாயகர் அமரர் அனுர பண்டாரநாயக்க தீர்ப்பு ஒன்றை அளித்துள்ளதாகப் பிரதி சபாநயாகர் தெரிவித்துள்ளார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், இந்தத் தீர்ப்பை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஏற்றுக் கொண்டதாகவும் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

## உச்சநீதிமன்றின்...

யுள்ளார். அரசியல் சாசனத்திற்கு அதிஉச்ச அதிகாரம் காணப்படுகின்றது என்பதே தமது நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்திற்கான அதிகாரங்கள் தொடர்பில் அண்மையில் 'திவிநெகும' சட்டம் தொடர்பிலான சர்ச்சையின் போது சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரதம நீதியரசரை இழிவாகப் பேசியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

24 வருட நாடாளுமன்ற வாழ்க்கையில் மிகவும் துரதிஷ்டவசமான சம்பவமாக தாம் இதனைக் கருதுவதாக லக்ஷ்மன் கிரியல்ல குறிப்பிட்டுள்ளார்.

## மன்னாரிலும்...

படக் கூடிய மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பணைக்குளம், மற்றும் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை ஆகிய கிராமங்களின் மக்களுக்கே அரசாங்க அதிபர் ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்து உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி.மொஹமட் ரியாஸ் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

## இறுதிக்கட்ட...

2008, 2009 காலப் பகுதியில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்து வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ள போதிலும் அந்த விசாரணை போதுமானதாக இல்லை. எனவே இக்கொலைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் மீது மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகள் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் ஏனெனில் விடுதலைப் புலிகளும் தங்கள் கட்டுப்பாட்டிலிருந்து பெருமளவு மக்களைக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு மட்டுமல்லாது தற்போதும் இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்வதுடன் தற்போதும் சிக்கல் நிலை உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்த முடிவில் மொத்த மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பணிப்புறக்கணிப்பு....

யுடன் நிறைவு பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்திய நிபுணர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் உடன் கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியே இப்பணிப்புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அமெரிக்க...

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுவின் தலைவராகப் பதவி வகித்து வருகிறார். முன்னதாக, ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவராக உள்ள சூசான் ரைஸ் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்பட்ட போதிலும், பெங்காசியில் அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான சர்ச்சையை அடுத்து, ஜோன் கெர்ரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பாதுகாப்பு...

கப்பட்டுள்ளது. இதனால் தமது சங்க உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அச்சுறுத்தல் சம்பவங்கள் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# மின் உற்பத்தி திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது ஈரான்

(கொழும்பு)

இலங்கையில் மின் உற்பத்தி திட்டங்களை ஆரம்பிக்கிறது ஈரான், 106 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் 180,000 குடும்பங்களுக்கு மின் விநியோகிக்கப்படவுள்ளது.

ஈரானின் SUNIR என்ற நிறுவனத்துடன் 2009ம் ஆண்டு அப்போதைய இலங்கை மின்துறை பிரதி அமைச்சர் சாகல ரத்நாயக்க "RE8" என்ற பெயரில் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஈரான் நிறுவனம் மின் உற்பத்தி திட்டத்தில் ஈடுபடவுள்ளது. இதற்கான காப்புறுதியை ஈரான் ஏற்றுமதி நிறுவனம் ஒன்று வழங்குகிறது.

ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாதென இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# கடலை வாங்குவதைப் போன்று கண்ணிகளை அகற்ற முடியாது

## அமைச்சர் வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

கடைகளில் கடலை வாங்குவதனைப் போன்று கண்ணி வெடிகளை' அகற்ற முடியாது என மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கரந்தெனிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

30 ஆண்டுகளாக புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பத்தாண்டு கால அவகாசம் தேவைப்படும். நேர்மையாக செயற்படும் தலைவர் ஒருவர் இருந்த காரணத்தினால் வடக்கு யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்தது.

பயங்கரவாதிகள் 30 ஆண்டுகளாக அழிவுக்கு உட்படுத்திய பிரதேசங்களை ஒன்றிரண்டு நாட்களில் வழமைக்கு கொண்டு வர முடியாது.

வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப் பட்டுள்ளனர். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உண்மையை மூடிமறைத்து குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.



கண்ணிவெடி அகற்றும் பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ள முடியாது எனவும் அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

# தொடரும் சீரற்ற காலநிலை; பலியானோர் தொகை 30

நாட்டில் 18 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுவரை 30 பேர் பலியானதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுமாலை தெரிவித்தது.

இதன்போது 22 பேர் காயமடைந்துள்ள நிலையில், மேலும் 11 பேர் காணாமற் போயுள்ளனர்.

74 ஆயிரத்து 995 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 87 ஆயிரத்து 641 பேர் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்..

6 ஆயித்து 117 வீடுகள் பகுதியில் சேதமடைந்துள்ளதுடன், 2 ஆயிரத்து 54 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில் இடப்பெயர்வுக்கு உள்ளான 56 ஆயிரத்து 772 பேர் 168 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில், மாவட்டத்தின் பல குளங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தாழ்நிலப் பகுதிகளில் அதிக பாதிப்பு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை பொலநறுவை - மட்டக்களப்பு பிரதான வீதி நீரில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இவ்வீதியால் பயணிப்பவர்கள் மாற்று வீதிகளை பாவிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்

# சுகாதார சேவையில் பணிபுரியும் மூன்று பெண்கள் மீது வல்லுறவு

சுகாதார அமைச்சின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களில் பணிபுரியும் மூன்று பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை செய்யும் பொறுப்பு பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்திய விநியோக பிரிவு மற்றும் தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் வைத்து குறித்த மூன்று பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட பெண்கள் சுகாதார அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன் பின்னரே சுயாதீன விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# டுவென்ரி-20 கிரிக்கெட்தொடரை சமன் செய்தது இங்கிலாந்து




(மும்பை)

மும்பையில்' நேற்று நடந்த இரண்டாவது டுவென்ரி - 20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் இரண்டுபோட்டிகள் கொண்ட ருவென்ரி - 20 தொடர் சமனானது

மும்பையில் நடந்த இரண்டாவது டுவென்ரி - 20 கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 177 ரன்கள் எடுத்தது. இந்திய அணி சார்பில், டோனி, கோலி ஆகியோர் தலா 38 ரன்களும், சுரேஷ் ரெய்னா ஆட்டமிழக்காமல் 35 ரன்களும், ரோகித் சர்மா 24 ரன்களும், காம்பீர் 17 ரன்களும் எடுத்தனர். புந்துவீச்சில் றென்பச்இறைட் தலா 2 இபிரஸ்னன், மீக்கர், ரெட்வெல், தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

இதன் பின்னர் 178 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில்துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 181 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக லம்ப் 50, மோர்கன் ஆட்டமிங்க்காமல் 49, ஹலஸ் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

புந்து வீச்சில் யுவனாஜ் 3, அசோக்டின்டா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனான மோர்கன் , தொடர் நாயகனாக யுவராஜ் தெரிவானார்கள்.

# அமைச்சர் பசில் - விரிவுரையாளர்கள் சம்பளப்பிரச்சினை குறித்து பேச்சு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் அமைச்சர் பசில் ராஜபக்ஸவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தங்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மற்றும் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றதாக அவர் கூறினார்.

விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் குறித்து கலந்துரையாடும் பொருட்டு அமைச்சர் பசில் ராஜபக்ஸவினால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

தீர்வு யோசனைகள் தொடர்பில் பொருளாதார அமைச்சரினால் உயர்கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் சில தினங்களில் விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கான தீர்வுகள் அடங்கிய சுற்றறிக்கை வெளியிடப்படும் என எதிர்ப்பார்ப்பதாவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுமுறை நேரத்தில் மோசடியா? பேருந்து ஊழியர் மீது நடவடிக்கை

விடுமுறை சமயத்தில் மோசடிகளில் ஈடுபடுகின்ற பஸ் ஊழியர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

விடுமுறை சமயத்தில் மேலதிகமாக பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் சில பஸ் ஊழியர்கள் அதிக கட்டணங்களை அறவிடுகின்றமை குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இத்தகைய மோசடிகள் தொடர்பில் கண்டறியப்படும் பட்சத்தில் அந்த பஸ்களுக்காகன போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை கைப்பற்றுவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் அத்தகைய பஸ் ஊழியர்களை கண்டறிவதற்கான நடமாடும் பரிசோதகர்கள் 24 மணித்தியாலங்களும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

# விஞ்ஞான வினாத்தாள் வெளியானமை: பிரத்தியேக ஆசிரியர் விளக்கமறியலில்

கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விஞ்ஞான வினாத்தாள் வெளியானமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிரத்தியேக வகுப்பு ஆசிரியரும் மற்றுமொருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் கடுவளை பதில் நீதவான் கோம்பலகே முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய போதே அவ்விருவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண் தரப்பரீட்சையில் விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியாகிவிட்டது என்ற முறைப்பாட்டையடுத்து அது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே பொலிஸார் இவ்விருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் ஆசிரியரால் வழங்கப்பட்டுள்ள மாதிரி வினாத்தாளில் உள்ள கேள்விகளில் 18 கேள்விகளும் படங்களும், விடைகளும் பரீட்சையின் போது வழங்கப்பட்ட வினாத்தாளில் உள்ள கேள்விகளும், படங்களும் ஒரேமாதிரியாக இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததை அடுத்தே இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விஞ்ஞான பாடத்திற்கான பரீட்சை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு முன்னர் கம்பஹா பிரதேசத்திலேயே இந்த மாதிரி வினாத்தாள் தொடர்பில் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.